திராவிடநாடு

22—2—59 | வார வெளியீடு | விலை 16 காசு

"நான் அடிமையாயிருக்க எப்படி விரும்பவில்லையோ

அதுபோல

எசமானக இருக்கவும் விரும்பவில்லை."

சாதாரண குடிகளில் ஒருவனுகப் பிறந்து, தன் சேவை மூலம் பொதுநலமே பெரிதெனக் கருதும் பண்பு பெற்று, மனித வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இம் மேதையின் 150-வது பிறந்த நாளை உலகம் கொண்டாடுகிறது.

பொது உள்ளம் கொண்ட புனிதர்!

"ஆளைப்பாருங்கள் ஆளை! அசல் மனிதக் குரங்கு! பார்க்கவே அருவருப்பாயிருக்கிறது!—முதலில் இங்கிருந்து போகச்சொல்லுங்கள். இப்படிப்பட்டவனோடு என்னால் சேர்ந்து வேலை செய்யமுடியாது. கொஞ்சமாவது நாகரிகமாக இருக்கவேண்டாம்? செச்சே! அவனை இப்போதே போகச் சொல்லுங்கள். இல்லாவிடில், இந்த வழக்கை, என்னிடமிருந்து, வேறுயாரிடமாவது கொண்டுபோங்கள்"

கொஞ்சமும் அஞ்சாமல் தைரியமாகச் சொன்னார் அவர்! இப்படிச் சொன்னால் 'அவன்' மனம் துன்புறுமே என்பதைக்கூட எண்ணவில்லை! 'அவன்' ஒரு குற்றமும் செய்யவில்லை; தோற்றம் சரியில்லை என்பதைத் தவிர. அதுவே காரணம் அவனை நான் போகச் சொல்வதற்கு, என்று கர்ச்சித்தார் அவர்!!

அவர் சொல்லியதும் உண்மைதான். கையும் காலும், சாதாரணமாக இருப்பதைவிட, அவனுக்கு நீண்டிருந்தன; கூம்பியதோள்; கைவிரலும் கால்விரலும் நீண்டு அருவருப்பாகத்தானிருந்தன; சீவப்படாத தலை, உருவத்தை இன்னும் கோரமாக்கியது. அவன் ஒன்றும் 'அழகு'ப் போட்டிக்காக அங்கே போகவில்லை! அவனை, ஒரு வழக்கில் வாதாடும் வக்கீலாக அங்கே அனுப்பியிருந்தார்கள். வழக்கின் முக்கிய வக்கீலான **எட்வின்ஸ்டான்டன்** என்பார்தான், அருவருக்குத் தக்க தோற்றத்துடன் காட்சியளித்த ஆபிரகாம் லிங்கனைப்பற்றி இவ்வண்ணம் சொன்னார்.

பரபரப்பான வழக்கு அது! அமெரிக்காவைக் கலக்கிய விசித்திரமான வழக்கு!! மெக்கார்மிக் என்பார் தொடுத்திருந்தார். தான் கண்டுபிடித்த ஒன்றை **மேன்னி** என்பார், தன் அனுமதியில்லாமல் பயன்படுத்திக் கொண்டதால், தனக்கு 4-இலட்சம் டாலர் தரவேண்டுமென்று, மெக்கார் மீது வழக்கு தொடர்ந்திருந்தார். பல தயாரிப்பாளர்கள், மேன்னியின் பக்கம் நின்றார்கள். வாட்சன் எனும் ஒரு தயாரிப்பாளர், ஆபிரகாம்லிங்கனையும், இவ்வழக்கில் பங்கேற்கும்படி பணித்தார்.

நாற்பத்தாறு வயதிருக்கும் லிங்கனுக்கு! கடன் தொல்லைகள் கடித்துக் கொண்டிருந்த நேரம்! தொட்டதெல்லாம் தோல்வி, தோல்வி, என்கிற துயரம் அவர் மனதைத் துளைத்துக் கொண்டிருந்த சமயம்! எதிர்காலம், இருளடைந்திருந்தது. அரசியல் வாழ்வில், அடியெடுத்துவைத்துக் கொண்டிருந்த அரும்பு நேரம். 500-டாலர்கள் 'அட்வான்சு' கொடுத்து, வாட்சன், லிங்கனை அழைத்தார்! உண்மையில், வாதாடப்போகும் வழக்கின் சட்ட நுணுக்கங்கள் அவ்வளவாகப் பயிற்சியில்லையென்றாலும், வந்த பணத்தை விட விருப்பமின்றி, லிங்கன் ஒப்புக்கொண்டார். உடனடியாக, சம்பந்தப்பட்ட சட்ட நூல்களையெல்லாம், படித்துத் தன்னைத் தயார் செய்தும்கொண்டார்.

இந்தக் கட்டத்தில், வழக்காடும் இடம் மாறியது; வக்கீலும் மாறினார். எட்வின் ஸ்டாண்டனை அமர்த்தினார்கள். அவரோடுகூட, ஆபிரகாம் லிங்கனையும் சேர்த்துவிடவேண்டும் என்கிற ஆசையோடு, வாட்சன் அழைத்துச் சென்றார். எட்வின்ஸ்டான்டன் தங்கியிருந்த ஓட்டலுக்கு, இருவரும் போனார்கள். சரியான உடையின்றி, அதோடு கோரமான உருவத்தோடு, காட்சியளித்த லிங்கனைக் கண்டபோதுதான், தலைப்பில் தந்த வார்த்தைகளைக் கொட்டினார் ஸ்டாண்டன்!!

லிங்கன் எதுவும் பேசவில்லை—இதில்தான் அவரது பெருந்தன்மையே இருக்கிறது — வார்த்தைகள் துளைத்தன; பேசாதிருந்தார்—படபடவெனப்பதிலளித்துவிடலாம்; அளிக்கவில்லை — சமயம் வராமலாபோகப் போகிறது என்றே நின்றார்! அவர் நினைத்த சமயம், வராமல் போகவில்லை—வந்தது—தன்னைப் புண்படுத்திய அந்த வக்கீலுக்கு பதிலுக்குப் பதில் செய்தார்! எப்படிப்பட்ட பதில் தெரியுமா!!

ஜார்ஜ்ஹார்டிங் என்கிற இன்னொரு வழக்கறிஞர் ஸ்டான்டனுடன் சேர்த்துவிடப்பட்டார். இருவரும் தீவிரமாக வாதிட்டனர்; வழக்குச் சம்பந்தமாகப் பேசினர்—கூடிக் கூடிக் கலந்தனர்—இவ்வளவுக்கும் லிங்கன், அறைக்கு வெளியேதானிருந்தார்! அவரைக் கூப்பிடவுமில்லை, ஒரு வார்த்தை சொல்லவுமில்லை, மரக்கட்டையை விடக் கேவலமாகவே நடத்தினர்!!

வழக்கில் ஸ்டாண்டன், ஹார்டிங் இருவர்மட்டுமே, பேசுவது என்று ஏற்பாடுசெய்யப்பட்டது. இதனால், வழக்கின் எந்தக் கட்டத்திலும் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை, லிங்கனுக்கு. ஆனால், அவருக்கெனப் பேசிய தொகையை மட்டும் கொடுத்துவிட்டார்கள். இது யார் உள்ளத்தைத்தான் உறுத்தாது? லிங்கனால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை! எனினும் 'காத்திருப்போம்' என்று இருந்தார்—ஆத்திரத்துக்கு வேலை கொடாமல், அமைதியாக இருந்தார்.

"ஐயா! இந்த வழக்கில் வாதாட நான் பற்பல விபரங்களைச் சேகரித்தேன். அவை இதோ, ஹார்டிங்குக்காவது இவை பயன்படக்கூடும் எனக்கருதுகிறேன்" என்று சொல்லித் தனது குறிப்புகளை, வாட்சனிடம் கொடுத்தார். அதை வாட்சன் கொடுக்க, ஹார்டிங், வாங்கி புரட்டிக் கூடப்பாராமல் மேசையின் மீது வீசி எறிந்தாராம்! அடுத்த நாள் வரையிலும், அந்தக் குறிப்புகள் வீசப்பட்ட இடத்திலேயே கிடந்தன.

வழக்கு நடந்தபோது, 'டின்னர்கள்' நடந்தன; உபசாரங்கள் நடைபெற்றன; ஒரேஒரு ஆள்மட்டும் அழைக்கப்படவில்லை! ஆபிரகாம் லிங்கன்தான் அவர்!!

வழக்கு ஆரம்பமாயிற்று-ஸ்டாண்டன் எழுந்து நின்று வாதாடினார். வழக்கு மன்றத்திலிருந்த லிங்கனுக்கு தன்னைப்படுத்திய, அவமானமெல்லாம் மறைந்தது, ஏனெனில், ஸ்டாண்டன் அவ்வளவு அருமையாக வாதாடினார்! லிங்கன், சொந்த வெறுப்பைப் அளவாக வைத்து ஸ்டாண்டனின் திறமையின் அளவினை மதிக்கத் தவறவில்லை. வாயார மனமாரப் பாராட்டினார்; மனதுக்குள் மகிழ்ந்தார்.

இந்த ஸ்டாண்டனை, அதுமுதல் நினைவிலேயே வைத்திருந்தார் லிங்கன்.

கொஞ்சக் காலத்துக்கெல்லாம், அருவருப்பானவர் என்று கருதப்பட்ட அதே ஆபிரகாம்லிங்கன், அமெரிக்காவின் தலைவரானார்.

வார்த்தைகளால் சுட்டுப் பொசுக்கிய ஸ்டாண்டனை, பழி வாங்க வேண்டுமென்றால், எதுவும் செய்யலாம் லிங்கன். பழிக்குப் பழி வாங்கினார்! எப்படித் தெரியுமா? ஸ்டாண்டனை, இராணுவ மந்திரியாக ஆக்கி!!

லிங்கனை, ஸ்டாண்டன் படுத்திய பாட்டையெல்லாம் அறிந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்—ஸ்டாண்டனே, இந்தச் சேதி வந்ததும் திகைத்தார்—ஆனால், அருமையான ஒரு திறமைசாலியைப் பயன்படுத்திக்கொள்ள, லிங்கன் தவறவில்லை! சொந்த விருப்பு வெறுப்பினைவிடப் பொதுநலனே அவர் கண்முன் நின்றது!!

(15-ம் பக்கம் பார்க்க)

"கொடுமையே! பிடிவாதமே!"

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [22-2-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 32

"கொண்டுவா பாதாம்கீர்! கோதுமை அல்வா வந்தால் தான் சாப்பிடுவேன். பட்டுமெத்தை போடு. பழரசம் ஒரு குடம் வேண்டும். ஒருபடி பாலைக் கால்படியாகக் காய்ச்சி எடுத்துவை. வெளியே போக 'கடிலாக்' கார், தயாரா?", என்று அன்றாடம் காய்ச்சியான அபூர்வசாமி, குட்டிச் சுவரான தன் குடிசைக்குள்ளே குந்திக்கொண்டு, மனைவியிடம் கத்தினால்; என்ன எண்ணுவர் பிறர்! அண்மையில், பிரிட்டிஷ் இராணியின் பிரியமுள்ள கணவர் வந்துபோனார், அவரே விமானத்தை ஓட்டினாராம்; அவர் நடையும் முகமும் உடையும் கவர்ச்சியூட்டும் விதத்தில் இருந்ததாம் — அதைக்கண்டு, நமது காமராஜர் உடனே ஒரு ஆகாய விமானத்தை ஓட்டக் கிளம்பி, பக்தவத்சலம் அவர்கள் 'சூட்டும் கோட்டும்' போட்டுக்கொண்டு ராஜநடை போட ஆரம்பித்து, சுப்பிரமணியம், எங்கே தனக்கொரு இளவரசி என்று தேடக் கிளம்பினால், என்னவென்று எண்ணுவோம் நாம்!!

அடுத்த வீட்டுப் பங்களாக்காரன் செய்வதைப் பார்த்து, குடிசையிலே வாழ்பவனும் ஆசைப்பட்டால் என்ன கிடைக்கும்? அப்படியே வாழ்வேன் என்று, வழிப்பறி செய்தாவது பணம் தேடி, வாழ முயற்சித்தால்தான் அது நிலைக்குமா? விடியுமுன் விலங்கோடு தானே போலீசார் வருவார்கள்? எடின்பரோ கோமகனுடைய எழிலையும், ஒயிலையும், இராணியின் துணைவரெனும் பாக்கியத்தையும் நாமும் பெறவேண்டுமென, அவருக்கு "வரவேற்பளித்த" காங்கிரஸ் தலைவர்கள் கிளம்பிடின், "கீழ்ப்பாக்கத்துக்குத்தானே", சேதி அனுப்புவோம் நாம்! காமராசரும் பக்தவத்சலமும் சுப்பிரமணியமும் "அதுபோலவே நடப்போம்" எனக் கிளம்பினால், பெரிய "காமிக் காட்சி"யாக இருப்பது மட்டுமின்றி, மூக்கும் மண்டையுமன்றோ உடையும்!!

இது புரியாதவர்கள்போல, நாடாளும் நல்லவர்கள், "வெள்ளைக்காரன், கோடை வந்ததும் ஊட்டிக்குப் போனதுபோல் நாங்களும் போகப்போகிறோம். சட்டசபைக் கூட்டத்தை அங்கேதான் நடத்தப் போகிறோம்", என்று தீர்மானித்துவிட்டார்கள். தி. மு. க. தன் அதிருப்தியைத் தெரிவித்த பிறகும், அடாது; வேண்டாம், தேவையல்ல, வரிப்பணத்தைக் கரியாக்காதீர்கள் என்று வேண்டியளவுக்குச் சட்டசபைக் குள்ளும் வெளியேயும் எடுத்துச்சொல்லியும், இன்னும் கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. வழிப்பறி செய்தாவது நானும் பங்களா வாசம் அனுபவிக்கப்பார்ப்பேன், நானும் இராஜநடைபோட முயல்வேன், என்பதைப்போல, சர்க்கார் கஜானாவும், அதைத் திறந்து மூடும் ஆட்சிச்சாவியும் பெற்றிருக்கும் காந்தி அண்ணலின் சீடர்கள், உதகைக்குக் கிளம்ப இருக்கிறார்கள்! இப்படியொரு தடவை போய்வர என்ன செலவாகும் என்று கேட்டால், 50,000க்குள் ஆகலாம்—மேலே போனாலும் போகலாம், அதிகம் ஏற்படாது, என்று பதில்கள் தரப்படுகின்றன!!

நாகபுரி காங்கிரஸ் மாநாட்டிலே, அப்போதைய தலைவரான தேபர், ஒன்று சொன்னார், உள்ளமுருகச் சொன்னார், எல்லோரும் உணரும்படிச் சொன்னார், "நானும் பார்க்கிறேன். பணக்காரன் பணக்காரனாகிக்கொண்டே போகிறான்; ஏழை இன்னும் ஏழையாகவே ஆகிக்கொண்டே போகிறான். இந்த நிலை என் மனதைக் குடைகிறது" என்று. தேபர், காங்கிரசின் தலைவர்! இந்த நிலை மனதைக் குடைந்ததாலோ, இப்படிப்பட்ட ஆட்சியை நடத்தும் கட்சியின் தலைவராக இருந்து பயனென்ன என்ற வேதனையாலோ, தன் பதவியைத் தானாகவே விட்டிருக்கிறார்!! அவர் சொன்ன இந்த வாசகம், எல்லோரும் உணரவேண்டிய ஒன்றாகும். வாய்ப்பும் வசதியும் பெற்றவன், வாழ்கிறான்! அது இல்லாதவன் வதைகிறான்!! மாடிக்கு மேல்மாடி எழும்புகிறது— குடிசைகளோ, இருக்கும் சுவர்களையும் இழந்து கொண்டே வருகின்றன. இப்படி வாழும் பணக்காரர்கள் ஒரு நாட்டில் அதிகமா, ஏழைகள் அதிகமா என்று கேட்டால், "இந்திய உபகண்டம் ஏழை நாடு" என்று முத்திரைபெற்ற பிரதேசமாகும். சீமான்களை இங்கு விரல்விட்டு எண்ணிவிடலாம்! சீரழிவோர் பட்டியல்தான் அதிகம்!! வயலில் வாடுவோன், தொழிலில் துயர் அனுபவிப்போன், வேலையில்லாதவன், என்று இருக்கிற ஏழைகள்தான் ஏராளம். ஏராளம் என்பதுமட்டுமல்ல, ஏழைகளின் கும்பலால் ஆக்கப்பட்டதுதான் இந்த நாடு. இப்படிப்பட்ட நாட்டை ஆண்டிடுவோர், எவ்வளவு சிக்கனமாகவும், எவ்வளவு தூய்மையோடும் இருக்க வேண்டுமோ, அதில்லை. அதனால்தான் பணக்காரன் பணக்காரனாக உயரவும், ஏழை இன்னும் ஏழையாகத் தாழவுமான ஏறுமாறு, அதிகமாகிக்கொண்டே போகிறது! இந்த நிலையைத் தேபர் சொன்னார் — எச்சரித்தார் — இதற்கொரு வழிகாணுங்கள் என்று தெரிவித்தார்!!

பொது வாழ்க்கையில் காந்தியடிகளுக்கு வெற்றி தந்தது எது? — என்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டால், உடனே சொல்வார்கள், அவருடைய எளிமையான வாழ்வுதான் என்று! இலண்டனிலே நடைபெற்ற வட்டமேசை மாநாட்டுக்குப் போனபொழுது, "ஆகா! இலண்டனுக்கன்றோ போகிறோம்," என்று சூட்டும்

கோட்டும் சுருட்டும் கொண்டு செல்லவில்லை அவர். இடையில் நாலுமுழம், மேலே நாலுமுழம், சட்டை கூட இல்லாமல்தான் சென்றார். இப்படி அவர் எளிய முறையில் சென்றதே ஒரு பரபரப்பை உண்டு பண்ணிற்று! ஒருசமயம் அவரை, ஏன் நீங்கள் சட்டை போடக்கூடாது என்று கேட்டதற்கு, "எவ்வளவுக்குக்கூட துணியுடுத்த முடியாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என் தேசத்தில்—தெரியுமா? அப்படி இருக்கும்போது, எனக்குமட்டும் ஏன்?" என்று பதிலளித்தாராம். இந்தளவுக்கு, ஏழை நாடு இது என்பதைக் காட்டத் தன்னையே ஒரு கண்காட்சியாக்கிக் கொண்டார் காந்தி! தன் மூலம், தனது பூமிக்கு மாற்றாரின் அனுதாபமும் ஆதரவும் கிட்டவேண்டுமென ஆசைப்பட்டார்!! வெற்றியும் பெற்றார். இந்த நிகழ்ச்சிகளை, நேருபண்டிதர் அவர்களும் மறந்துவிடவில்லை. அடிக்கடி இந்தப் பூமி ஒரு ஏழை பூமி என்பதைக் கவனமூட்டவும் தவறுவதில்லை. சில இங்களுக்குமுன் சுற்றறிக்கையே விட்டார் பண்டித நேரு.

மந்திரிகளே!

"நாம் சிக்கனத்தைக் கடைபிடித்துக் காட்டவேண்டும். வாழ்க்கை முறையில் அதை நடாத்திக் காட்டவேண்டும். உங்கள பங்களாக்களில், எரியும் விளக்குகள் கூட நெடுநேரம் எரியாமல் நீங்கள் கவனிக்க வேண்டும். எல்லா விஷயங்களிலும், சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும். உங்கள் கார்களில்கூட, கொடி பறக்கவேண்டாம். அதனால், நீங்கள் மந்திரிகள் என்று பிறருக்குத் தெரியக்கூடும். அப்படியெல்லாம் காட்டிக்கொள்ளாமல் மிகவும் சாதாரணமாயிருக்கப் பழகுங்கள்."

இப்படி எழுதினார்! இதைக்கண்டு பலர், ஆகா, ஊகூ, என்னே எம் நேருவின் சிக்கன சிரத்தையென்றெல்லாம் முழக்கினர்! 'எலக்டிரிக் காண்ட்' வரையில் அல்லவா சிக்கனமாயிருக்கச் சொல்லுகிறார், என்றனர்!! ஆனால், இன்று, அதே அமைச்சர்கள் உதகை உல்லாசம்தேட அரை இலட்சத்தை வீணாக்குவோம் என்கின்றனர் — வெள்ளைக்காரனைப் போல் நாங்களும் போவோம் என்கின்றனர் — ஏனென்று கேட்பாரில்லை — இன்னும் காந்தியடிகளைப்போல, கீழே நாலுமுழம், மேலே நாலுமுழம் தரித்தபடியிருக்கும் சர்தார் வேதரத்தினம் போன்ற பழம் பெரும் தொண்டர்களிருக்கிறார்கள்—அவர்கள் கூட வாய்திறக்கவில்லை! ஒரு சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கூட, 'வரமாட்டேன்' என்று மறுக்கவில்லை!! எல்லோரும் பெட்டி படுக்கைகளைத் தயார் செய்து ஊட்டிவாசம் அனுபவிக்கக் கிளம்பிக் கொண்டிருக்கின்றனர்— திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பித் திருப்பி வாதாடியும், கேட்கவில்லை— கிளம்ப இருக்கிறார்கள்!!

"...இப்படி, சிக்கனமாயிருங்கள், சிக்கனமாயிருந்து திட்டம் நிறைவேறப் பணம் உதவுங்கள் என்று மக்களைப் பார்த்துச் சொல்கிறார்களே ஒழிய, அந்தச் சிக்கனத்தைச் சர்க்காரிலேயிருப்போர் கடைப்பிடிக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. ஆடம்பரமும், கேளிக்கையும் கொஞ்சமும் குறையவில்லை. சர்க்கார் மாளிகைகளிலே பழையகால தர்பார்கள் கொஞ்சம் கூட மாறவில்லை. நமக்கேற்றபடி, எதுவும் மாற்றப்படவில்லை; எல்லாம் பழைய ஆட்சி முறைப்படியே உள்ளது. அதற்காகப் பணம் செலவழிக்கப்படும் முறையும் தொடர்ந்து நடந்தவண்ணமே உள்ளது. சர்க்காரே ஏற்றுச் செய்யும் காரியங்களிலெல்லாம் தொடர்ந்து பணம் பாழாகிக்கொண்டே உள்ளது" என்று இந்தக் கிழமை, டில்லி பார்லிமெண்டிலே, முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காந்தியடிகளுடனிருந்தவருமான கிருபளானி, சிந்தை நொந்து செப்பியிருக்கிறார். வெள்ளையன் ஏற்படுத்தித் தந்த வழக்கங்கள் கொஞ்சங்கூட மாறவில்லை! — என்று, குமுறியிருக்கிறார். தாங்கள் செய்யும் காரியங்களிலும் பணத்தைப் பாழாக்குகிறார்கள்! ஆடம்பரத்துக்கும் அநாவசியப் பெருமைக்கும் வேறு பணத்தைக் கொட்டுகிறார்கள்!!

ஏ, தேசத்துரோகி—தில்லுமுல்லுக்காரா--திண்ணைப் பேச்சுக்காரா — கூட்டம் கூட்டிச் சப்தம் போடுகிறவனே—தெற்குத்தேய்கிறது என்று கூறும் சண்டாளா—இப்படி, நம்மை, எவ்வளவு வேண்டுமாயினும் ஏசட்டும். நெஞ்சார, மனதார, இந்தக் காங்கிரஸ் அமைச்சர்களால் சொல்லமுடியுமா, தாங்கள் உதகையில் சட்டசபையை நடத்துவது முக்கியமான காரியம் என்று!! நிச்சயமாகச் சொல்லமுடியாது. ரஷிய சரித்திரத்திலே கேள்விப்பட்டிருக்கிறோம், மன்னன் ஜாருக்கு, மாரிகாலத்துக்கொரு மாளிகையும், கோடைக்காலத்துக்கொரு மாளிகையும் இருந்ததாக. இங்கிருந்த குட்டி மன்னர்கள்கூட, அப்படித்தான் வைத்திருந்தார்கள். இதற்கெல்லாம் பணத்தைச் செலவழித்துவிட்டு, மக்கள் பசிதோய்ந்த கண்களை நிமிர்த்திப் பார்த்தபொழுது, அலட்சியத்தைப் பதிலாகத் தந்ததால்தான், அந்த மணிமுடிகள் யாவும் தரையில் உருண்டன! தவிடுபொடியாயின சிம்மாசனங்கள்!!

வரியை வாங்குகிறான்—அந்த வரியை நியாயமாகச் செலவழிக்கிறானா? இல்லை! — கொள்ளை கொள்ளையாகச் சம்பளம் கொட்டிக்கொள்கிறான். போதாதென்று சிம்லாவிலே ஒரு வாசஸ்தலம் —: உதகையிலே ஒரு வாசஸ்தலம்—அதற்கு ஏராளமான பணம்—அப்பப்ப! இந்த வெள்ளைக்காரர்கள் நம்வரிப்பணத்தை வாங்கி அடிக்கும் கொட்டமிருக்கிறதே, இது கொள்ளை! கொள்ளை!! பகல் கொள்ளை!!!

என்றவர்கள், காங்கிரஸ்காரர்கள். இதுபோன்ற கொள்ளைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காகவே, சுதந்திரம் கேட்டார்கள். சுதந்திரம் வந்த பிறகும், கொஞ்சம் பயந்தவர்கள் முன்பு சொன்னபடியே நடக்கவேண்டுமென்றே எண்ணினார்கள்! அதனால்தான், காமராஜருக்கு முன்புவரையில், இங்கு முதலமைச்சர்களாயிருந்தவர்களுக்கு, ஊட்டிக்கு ஓடும் தைரியம்வரவில்லை. ஆண்டு பன்னிரண்டாகிவிட்டது, தொடர்ந்து நமது காங்கிரசே ஆட்சியிலிருந்து வருகிறது, யார் நம்மைத் தட்டிக் கேட்க முடியும், எதிர்க்கட்சிகள் என்பனவற்றின் ஒப்புதலையும் பெற்றுவிட்டோம், தி. மு. க. மட்டும் தானே ஓலமிடுகிறது, என்ன செய்ய முடியும் நம்மை என்கிற "தைரியமே" அதிகமாகியிருக்கிறது, காமராஜருக்கு! இல்லையென்றால், சென்னை அரசு இந்த முடிவுக்கு வருமா!!

அதோ ஏழை மகன் கதறுகிறான்--இல்லாதவன் 'எரிமலைகளை' வைத்துக்கொண்டிருக்கிறான் இதயத்தில்—காமராஜர் உதகைக்குக் கிளம்புகிறார் தனது உல்லாசக் குழுவோடு! உண்மையில், நெஞ்சு பொறுக்கவில்லை நமக்கு, கொதிக்கிறது உள்ளம்; "கொடுமையே! பிடிவாதமே!! ஊரார் பணத்தில் உடம்புகுளிக்கும் போக்கே!!! உன் பெயர்தான் காங்கிரசாட்சியா?" என்று மனம் வெதும்பிக் கேட்கிறோம்.

*

கழக முடிவுகள்

பிப்ரவரி 7, 8 தேதிகளில் புதுக்கோட்டையில் கூடிய தி. மு. க. பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள்.

ஆடம்பரச் செலவுகளையும், வீண் விரயங்களையும் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் சென்னை அரசினர், ஏராளமான செலவுக்கு வழிவைப்பதும், பொதுமக்களுக்கு விருப்பமில்லாததும், ஆளும் கட்சியினராலேயே பல காலம் கண்டிக்கப்பட்டு வந்ததுமான சென்னைச் சட்டமன்றத்தைச் சில தடவை உதகமண்டலத்தில் நடத்துவது என்று முடிவு எடுத்திருப்பதைக்கண்டு இப் பொதுக்குழு வருந்துவதுடன், சென்னை அரசினர் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், அந்த முடிவைக் கைவிடுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதோடு, அங்ஙனம் கைவிடாதிருப்பின் தமிழ் மக்களின் பேரெதிர்ப்புக்கு ஆளாக நேரிடும் என்பதையும் எச்சரிக்கிறது.

*

தமிழகத்தில் தமிழ் மக்களுக்குப் பயன்படும் பொருட்டு நிறுவப்பட்டிருக்கும் சென்னை—திருச்சி வானொலி நிலையங்களில், செய்திகளை அறிவிக்கும்போதும் நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும்போதும் பயன்படுத்தப்பட்டு வந்த—பயன்படுத்தப்பட வேண்டிய 'வானொலி' என்ற அருந்தமிழ்ச் சொல்லை அகற்றிவிட்டு வேண்டப்படாத இந்தி மொழியின் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டும் பொருட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உணர்ச்சியையும், ஆவலையும், கோரிக்கையையும் மதிக்காமல், இந்தியில் உள்ள 'ஆகாஷ்வாணி' என்ற விரும்பத்தகாத சொல்லைப் பயன்படுத்தும் இந்தியப் பேரரசினரின் போக்கை, இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, தமிழர்களின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாமல் இந்தியப் பேரரசு தொடர்ந்து இந்த இழிநிலையை நீடிக்கவிடுமேயானால் போராட்டத்தின் மூலம் நீதியைப் பெறவேண்டிய இன்றியமையாமை ஏற்படும் என்பதையும் இந்தியப் பேரரசினர்க்கு எச்சரிக்க விரும்புகிறது.

*

உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்; நிலப்பிரபுத்துவ முறை ஒழிந்தாக வேண்டும்; உச்ச வரம்பு கட்டவேண்டும் — என்ற கொள்கைகளை கழகம் பல முறை வலியுறுத்தி இருப்பதை நினைவிற்கொண்டு, இப்போது பேசப்பட்டுவரும் நிலச் சீர்திருத்தத் திட்டம், கூட்டுப் பண்ணை முறை ஆகியவற்றினைக் குறித்த கருத்தினை ஆய்ந்தறிந்து மூன்று திங்களுக்குள் தலைமைக் கழகத்துக்கு அறிவிக்க தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்களை அமைப்பாளராகவும், தோழர்கள் கோகுலகிருட்டினன் பி. ஏ., பி. எல்., ப. இராமலிங்கம், நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ. ஆகியோரையும் (மேற்கொண்டு அவர்களாக மூவரைச் சேர்த்துக்கொண்டு) கொண்ட குழுவினை இப்பொதுக்குழு நியமிக்கிறது.

*

சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கத்தையும், நடைமுறைகளையும், விளைவுகளையும் நேரிடையாகவும், பலரின் வாக்குமூலங்களைக் கேட்டறிந்தும் அறிக்கை ஒன்று தயாரித்து அளிக்க, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில், தோழர் தர்மலிங்கம் எம். பி., தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., மதுரை முத்து ஆகிய மூவர் (மேலும் 3-பேர்களை அவர்கள் நியமித்துக்கொள்ளும் உரிமையுடன்) கொண்ட குழுவை இப்பொதுக்குழு அமைப்பதோடு, மேற்படி குழு மூன்று திங்களில் அறிக்கையைத் தயாரிக்குமபடி கேட்டுக்கொள்கிறது.

*

மாணவர்கள் கட்சி அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடலாகாது என்ற கழகத்தின் நீண்டகாலத் திட்டம் இன்று ஆளும் கட்சியான காங்கிரசாலும், பிற கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும், வலியுறுத்தப்பட்டும் வருகிறது கண்டு மகிழ்வதுடன் இதற்காக, பல கட்சித் தலைவர்கள் கூடிய கூட்டத்தில் தி. மு. க. சட்டசபைக் கட்சித் தலைவர் சி. என். ஏ. அவர்கள் தெரிவித்த கருத்தின் வழி, மேற்கொண்டு ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி, முடிவு காண சி. என். ஏ. அவர்களுக்கு இப் பொதுக்குழு அதிகாரம் அளிக்கிறது.

*

1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்கிவிட முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்துத் தென்னகத்திலுள்ள பல்வேறு தலைவர்களும், நீடித்த காலத்திற்கு ஆங்கிலமே ஆட்சி மொழியாகப் பயன்பட வேண்டும் என்று சென்னை அரசியலாரும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தும், அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு, டெல்லி ஆட்சியாளரின் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், அந்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் அவற்றைத் தடுத்து நிறுத்த வழிவகைகளைக் காண பொதுச் செயலாளருக்கு பூரண அதிகாரம் அளிக்கிறது.

*

(அ) இலங்கையிலுள்ள சில பொறுப்பற்ற சிங்களத் தலைவர்கள் கிளப்பிவிட்ட சிங்கள வெறியுணர்ச்சிக்குப் பலியாகித் தமது உரிமைக்காகப் பல துன்பங்களுக்கு ஆளாகிவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து, இலங்கையை இரத்தக்

கறையிலிருந்து காக்க, வெறிச் செயல்களை விடுத்து, அதனைத் தூண்டும் அரசியல் தலைவர்களைக் கண்டித்து அமைதிநிலவச்சிங்கள மக்கள் முன்வரவேண்டுமென:இப் பொதுக்குழுகேட்டுக்கொள்கிறது.

(இ) இதுபற்றி இந்தியப் பேரரசினர், இலங்கை அரசினரிடம் தனது நல்லுறவைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைக்கும், வாழ்வுக்கும் இதுவரை பாதுகாப்புத் தேடத் தவறியதைக் கண்டிப்பதுடன் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

*

தென்னகத்திலிருந்து இலங்கையில் இறக்குமதியாகிக்கொண்டிருந்த கைத்தறித் துணி, பீடி போன்ற பொருள்களுக்கு இலங்கை அரசினர் திடீரென்று தடை விதித்துவிட்டிருப்பதைக் கண்டு இப்பொதுக்குழு வருந்துவதுடன், அத்தகைய தடை உத்தரவினால் ஏற்பட்டிருக்கும் சீர்குலைவை மாற்றவும், தென்னகப்பண்டங்கள்தொடர்ந்து ஏற்றுமதியாவதற்கான வழிவகைகளைத் தேடவும், அத்தகைய பண்டங்களின் உற்பத்தி பாழ்பட்டுப் போகாமல் பாதுகாப்பு அளிக்கவும் உடனடியாகச் சென்னை அரசினரும், இந்தியப் பேரரசினரும் முன்வர வேண்டுமென்று இப் பொதுக்குழு அன்னாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

*

தென்னக மக்களுக்குப் பயன்படக் கூடிய இரும்பு பாக்சைட், மாக்னசைட் போன்ற பல்வேறு கனிப் பொருள்களை வெட்டியெடுக்கவும், அவற்றை உற்பத்திப் பொருள்களாக மாற்றுவதற்கான பெருந் தொழிற்சாலைகளை நிறுவவும் திட்டங்கள் வகுக்காமல் தென்னகத்தைப் :புறக்கணித்து வரும் இந்தியப் பேரரசினர் போக்கையும், தூண்டுகோல் முயற்சிகளோ சொந்தப் பொறுப்பேற்கும் முயற்சிகளோ எடுக்காமல் அலட்சியப் போக்கில் இருந்துவரும் சென்னை அரசியலாரின் போக்கையும் இப் பொதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அவற்றைத் தென்னக மக்களுக்குப பயன்படுத்துவதற்கான திட்டங்களை உடனடியாக் வகுக்குமாறு சென்னை அரசினையும், இந்தியப் பேரரசினையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

மாபெரும் குடிசைத் தொழிலான கைநெசவுத் தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்புச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை இப்பொதுக்குழு வற்புறுத்துவதுடன், அவ்வாறு செய்யப்படும் வரை 12-புதுக் காசுக்குக் குறையாமல் (ரிபேட்) தள்ளுபடித் தொகை கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது. அத்துடன், 8—2—59-முதல் கைத்தறி வாரம் கொண்டாடும்படி கேட்டுக்கொண்டிருக்கிற அரசாங்கம்—நாடெங்கணும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கும் இந்த நேரம் வரை தள்ளுபடித் தொகையை 12-காசாகக்கூட உயர்த்தாமல் அலட்சியம் காட்டுவது குறித்து அரசாங்கத்தின் போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

*

மொழிவழி பிரிந்திருப்பதும் இனவழி ஒன்றுபட்டிருப்பதுமான கேரள—கன்னட—ஆந்திரப் பகுதிகளில், தி. மு. கழகக் கொள்கை, கோட்பாடுகளைமேலும் பரப்பவும், திராவிடத்தின் விடுதலைப் பணிக்கு மேலும் வலிவும், பொலிவும் சேர்க்கவும் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களைத் தலைவராகவும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். எஸ். இளங்கோ, கி. மனோகரன், எஸ். வி. பதி (கருநாடகம்). சுபேர் (கேரளம்), நரசிம்மன் (ஆந்திரம், ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட பிரச்சார அமைப்புக் குழு ஒன்றினை இப்பொதுக்குழு நியமிப்பதுடன், அது தன் திட்ட அறிக்கையை இரண்டு மாதத்திற்குள் தலைமைக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவுசெய்கிறது.

*

புதுவை அரசுப் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுவது என்று இப் பொதுக் குழு முடிவு செய்திருக்கிறது. கழக அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து தலைமைக்கழக ஒப்புதலுக்கு வைக்க தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களைத் தலைவராகவும், தோழர்கள் என். எஸ். இளங்கோ, ச. சிவப்பிரகாசம், ஏ. பெருமாள், முபாரக் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்வுக்குழு ஒன்றினை இப் பொதுக் குழு நியமிக்கிறது.

*

நாட்டில் நாளுக்கு நாள் உணவுப்பொருள்களின்விலைகள் விஷம் போல் உயர்ந்துகொண்டு போவதால் சாதாரண பாட்டாளி மக்களும், நடுத்தர வகுப்பு மக்களும் மிகவும் தொல்லைகளுக்கு ஆட்படுவதால் விலைவாசி உயர்வை உடனடியாகத் தடுத்து குறைக்க வேண்டுமென்று அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

உணவுப் பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதை முழுவதுமாக இரத்து செய்யவேண்டுமென இக்குழு, அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

1959-ஏப்ரல் திங்களிலிருந்து ஜூன் திங்களுக்குள் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது என்று இப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

உலகம் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது என்று சொல்கிறார்கள்; நகரிகம் எவ்வளவோ பெருகியிருக்கிறது என்று சொல்கிறார்கள்; விஞ்ஞானம் எவ்வளவோ உதவி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் பயம் இல்லாமல் மனிதர் வாழ முடியவில்லை. மனிதன் காட்டுமிராண்டியாய் மலைக்குகையிலும் புதரிலும் வாழ்ந்த காலத்திலும் பயந்து பயந்து வாழ்ந்தான்........நாகரிகம் பெற்று விஞ்ஞானத்தின் உதவியால் சிறந்தவாழ்க்கை வாழ்கின்ற இந்தக்கால மனிதனும் பயந்து பயந்துதான் வாழ்கின்றான்!

கருத்தடையைக்

கண்டிப்பதா? வரவேற்பதா?

அ. அப்துல் ஜலீல்

சர்க்காரின் கருத்தடை இயக்கம் மிக விரைவாகப் பரவி வரும் இந்நாளில் இதுபோன்ற கட்டுரைகள் அவசியமா — தேவையா என்று சிலர் கருதலாம். ஆனால் கருத்தடைபற்றி நாட்டிலே உள்ளவர்கள் இன்னும் சரியானபடி தெரிந்துகொள்ளும் வாய்ப்பை உண்டாக்கவும், கருத்தடை எதிர்ப்புக்கும் ஆதரவுக்கும் இடந்தந்து அவர்களின் கருத்தை அறியவும் இதுபயன்படும் என்று கருதுவதாலுமே, கருத்தடையை ஆதரித்தும் எதிர்த்தும் எழுதப்படும் சிலகட்டுரைகளை வெளியிட்டு, அதன் வாயிலாக இந்த இயக்கத்தின் நோக்கையும் போக்கையும் அறியும் வாய்ப்பை உண்டாக்க விரும்புகிறோம். எனவே, கருத்தடையை ஆதரித்தும் எதிர்த்தும் எழுத விரும்புவோர் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்—**ஆசிரியர்.**

அரியதான! ஆச்சரியமான இந்தக் கேள்வியினை கல்லாத ஒருவனைக் கேட்டால்கூட, கேள்வியின் முதற்சொல் காதில் விழுந்தவுடனேயே, அவன் "கருவை அழிப்பதாவது, நலனை இழப்பதாவது? நல்ல செல்வங்களைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ் என்று ஆசி கூறப்பெறும் பண்பட்ட தென்னகத்தில் பிறந்த நீயா இப்படிக் கேட்பது?" என்று பலவாறாக, கேட்டவனையே கோபமாக திருப்பிக் கேட்பான். அது இந்த நாட்டு மண்ணின் இயல்பு! என்றுபுறந்தருதலைத் தங்களது தலைக்கடனாகக்கொண்ட தாய்மார்களின் வயிற்றில் பிறந்த, தமிழரது தொன்மையான நாகரிகம்!

மேற்குறித்த அதே வினாவினை கருத்தடையைப்பற்றி அமெரிக்க மண்ணில் இறங்கி ஒரு மாதிரியாகவும்; இந்திய மண்ணில் நின்று வேறொரு மாதிரியாகவும்; பேசும் மொரார்ஜியார் போன்ற கற்றறிந்த நமது மந்திரிமார்களிடம் விடுத்தால், அவர்கள் "இன்றைய நிலையில் இந்தியா ஏழ்மையாலும், வறுமையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றவே நாங்கள் கருத்தடையைக் கண்டிப்பாக வரவேற்கிறோம்!" என்றுதான் விடையிறுப்பார்கள். அவர்களது அருமையான அனுபவ மொழிகளை ஆராயும் நிலையில்தான் இன்று நாடு இருக்கிறது!

நீண்ட நாட்களுக்கு முன் கூடிப் பிரிந்த மணமாகாதஒருதோழனோ, அல்லது தோழியோ மற்றொரு மணமாகாத தோழனையோ, தோழியையோ சந்திக்கும் போது என்ன பேசிக்கொள்கிறார்கள்? முதலாவதாக நலமறியும் படலம். இரண்டாவதாக கல்யாணக் காட்சி. மூன்றாவதாக அவர்களது பேச்சு 'எத்தனை குழந்தைகள்?' என்ற கேள்வியில் தான் துவங்கும். இதையெல்லாம் நன்கறிந்துதான் 'மங்கலம்' என்று மணவாழ்வைச் சொன்ன வள்ளுவப் பெருந்தகை, அவ்இல்வாழ்வுக்கு 'நன்கலம்' என்று நல்லபல குழந்தைகளைப் பெறுவதையே சொல்லுகிறார். அதுமட்டுமல்ல; சங்ககாலப் புலவரான பிசிராந்தையாரும் 'யாண்டு பலவாக' என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளில், தனக்கு நரை, திரை என்ற மூப்பு முத்திரைகள் இல்லாதது ஏனென்றால்? தனது மாண்புமிக்க மனைவியும், மக்களும் நிறைந்த கல்வியறிவு உடையவர்களாக இருந்தார்களென்றும், தனது பணியாளர்களும் குறிப்பறிந்து பணிபுரிந்தார்கள் என்றும், அவரை ஆண்ட மன்னனும் நீதி வழுவாதவன் என்றும், அவரது ஊரிலே கொள்கையுடைய — கற்றறிந்த — அறிஞர்கள் பலர் வாழ்ந்திருந்தார்கள் என்றும் சொன்னார்.

இவைகளையெல்லாம் ஏன் சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், இன்றைய ஆராய்ச்சியாளரும், அன்றைய ஆராய்ச்சியாளரும், 'கவலையானது ஒரு மனிதனுக்கு முதுமையைக் கொடுக்கும்' என்ற ஒரேமுடிவைத்தான் சொன்னார்கள். ஆனால் புலவர் பிசிராந்தையார் முதுமையை மாற்ற, நல்ல குழந்தைகளைப் பெறுவதை ஒரு மருந்தாகவும் சொன்னார். எனவே, நாம் "ஏவாமக்கள் மூவா

மருந்து" என்ற முதுமொழியை எண்ணி அவர்களை கருவிலேயே கசக்கிவிடக் கூடாது என்பதை எடுத்துரைக்க வேண்டி இருக்கிறது.

இன்றைய கருத்தடை இயக்கத்தினரை சமுதாய துரோகிகள், சமூக வைரிகள் என்றும் கூசாமல் கூறலாம்' கருணைவள்ளல் காந்தி மனிதருள் மாணிக்கம் மாநபி, உலகப் புலவர் வள்ளுவர், பேரறிஞர் பெர்னாட்ஷா, அறிவியல் நிபுணர்களான சர். ஐசக்நியூடன், ஐன்ஸ்டீன் போன்ற சமுதாயச் சிற்பிகளை, அவர்களின் பெற்றோர்கள் கருவிலேயே அழித்திருந்தால், இன்று நமக்கு அந்த அரும்பெரும் மேதைகள் கிடைத்திருக்கமாட்டார்கள்! இன்று நாம் நமது அரசினரின் ஆணைக்கு அடங்கி அழிவுக் கொள்கையை ஆதரித்தோமானால், எதிர்காலத்தில் நமது வழி வருவோர் அறிஞர்களை, அரசியல் மேதைகளை, மனிதப் புனிதர்களை, மாவீரர்களை, கலைஞர்களை, கவிஞர்களை, அறிவியல்நிபுணர்களை, ஆற்றல் மிக்கவர்களை இழந்து, ஏங்கிப் பரிதவித்து, மீண்டும் அறியாமையின் எல்லைக்குத்தான் போக நேரிடும். இஃது எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாததொரு கூற்றாகும்.

அதையடுத்து, மாசற்ற மழலைமொழி மன்னரை மாய்க்க முன்கூட்டியே மருந்து தரும் மாண்பு மிக்கவர்கள், நாம் அந்தக் காலத்தைப் பற்றி பேசுகிறோமென்றும், ஏட்டுச் சுரைக்காய்கள் என்றும், பழமைத் தமிழகம் பலபல செல்வங்களைக்கொண்டு செழுமையாக வாழ்ந்ததென்றும், செழுமையான நிலையில் எத்தனை குழந்தைகளைப் பெற்றாலும் குற்றமில்லை என்றும் கூறுகிறார்கள். பைந்தமிழரின் பழந் தமிழகத்தில் செழுமை செழித்தது மட்டுமல்ல, வறுமையும் வாழ்ந்திருக்கிறது! சங்கத் தமிழ் கண்ட புலவருள் ஒருவரான பெருஞ்சித்திரனார் வறுமையால் வாடிய ஒரு குடும்பக் காட்சியை படம்பிடித்துக் காட்டுகிறார். அஃது இரக்கமில்லாக்கல்நெஞ்சம் கொண்டோனையும் இரங்கச் செய்யும் காட்சி. அக்காட்சியைக் கற்றறிந்த சான்றோர் பலரும் அறிவார்கள் என்றாலும், கருவழிக்கும் நற்செயலுக்கு வறுமையைக்காரணம் காட்டும் ஏட்டறியாத என்போன்ற ஒரு சிலருக்காக மீண்டும் சொல்ல வேண்டியது அவசியம் ஆகிறது.

ஒரு குழந்தையானது பசியால் துடித்தழுது, அதன் தாயிடம் பால் குடிக்கச் சென்றது. பல நாள் பட்டினி கிடந்த அவளிடத்தில் பால் இல்லாததால், மூடியிருந்த ஒருசில உணவுக் கலங்களிலாவது உண்ணுவதற்கு ஏதேனும் கூழோ, சோறோ இருக்கிறதா என்று திறந்து, கைவிட்டு ஆராய்ந்து பார்த்தது. பாத்திரங்களிலும் ஏதும் இல்லாததால் தாயை ஏக்கத்துடன்பார்த்துமீண்டும் அழுதது. அந்தத் தாயானவள் தனது சேயின் துன்பம் தாளாது அச்சேயினைச்சமாதானப் படுத்தச் சந்திரனைக் காட்டினாள். அப்போதும் அது அழுகையை அகற்றாததால் அடுத்திருந்த மரத்தினால் செய்த புலியைக்காட்டி "நீ இனிமேலும் அழுதால் இந்தப் புலியானது உன்னை அப்படியே வாய்பிளந்து விழுங்கிவிடும்" என்று அச்சமூட்டியும் சொன்னாள். மறுபடியும் அது அழுததால் அந்த அன்னை தனது மகனிடம் "பசிதீர்க்க பொருள் கொண்டு வந்து கொடுக்காது இவ்வளவு இன்னல்களுக்கு நம்மை ஆளாக்கிய உனது தந்தை வந்தால் அவரிடம் நீ எப்படிக் கோபிப்பாய் காட்டு கண்ணே!" என்று நகை காட்டியும் சொன்னாள். இறுதி வரை அந்தப் பச்சிளம் பாலகன் அழுதுகொண்டே இருந்தான் என்பதே அப் பரிதாபகரமான காட்சி. இச் செய்தியானது பண்டைத் தமிழகத்தில் பல குடும்பங்கள், பச்சிளஞ் சிறார்களின் பசியைக்கூட, போக்க வழியில்லாது வறுமையில் வாழ்ந்திருந்தன என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றன!

முன்பே குறிப்பிட்டது போல் இந்த நெக்குருகும் வறுமைக் கோலத்தைக்கேட்டது இலக்கியம் தெரிந்தவர்கள் மட்டும் தான். ஆனால் குசேலரின் வறுமைக் கோலத்தை கேட்டவர்கள் கணக்கற்றோர் இருப்பார்கள் என்பது உறுதி. இதையெல்லாம் கேட்ட நாம், அன்றைய வறுமைப் பிடியிலேகூட சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் கொண்டுவராத கருத்தடையை, வங்கப் பஞ்சம் வாட்டியபோதும் வரவேற்காத வெங்கொடுமையை, 'குடும்பக் கட்டுப்பாடு' என்னும் புனிதப் பெயரிட்டு, இன்றைய நமது மதிப்பிற்குரிய மத்திய அரசினரும், மாநில அரசினரும் கொண்டுவருவது ஏன்? என்று கேட்கிறோம்! தவறா? தகாதா?

அமைச்சர் பெருந்தகைகளும், கருத்தடைக் காரியஸ்தர்களும், குடும்பக்கட்டுப்பாட்டின்நிர்வாகஸ்தர்களும் அடிக்கடி சொல்லுகிறார்களாம், 'ஒருவனுக்கு ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் இருந்தால் போதும், பிறகு கருதரிப்பதை நிறுத்திவிடவேண்டும்' என்று. ஆனால் அது முற்றிலும் சரியல்லவென்பது நேர்மையாளர் ஒருவரின் நற்கருத்து! அவர் கேட்கிறார், 'அந்த இரு குழந்தைகளும் மரணத்தின் வாயில் அகப்பட்டு மாண்டு போனால், அறுவைச் சிகிச்சை மூலம் தனதுகருப்பையைத்திருப்பி வைத்துக்கொண்ட ஒரு ஏழைத் தாயானவள் அரசாங்கத்தை பார்த்து என்னகேட்பாள்' என்று. அந்தத் தாய் 'எங்களைக் குடிக்கக் கூழின்றி, குந்தக் குச்சின்றி வைத்திருக்கும் நாடாள்வோர் கொஞ்சக் குழந்தையுமில்லாமல் செய்தனரே!' என்று குற்றம் தானே சாட்டுவாள்! இவைகளை எல்லாம் சர்க்கார் செயல்படும் முன்னரே சிந்திக்கவேண்டும்.

அதையும் அடுத்து கருத்தடை மருந்தானது குறைமனம் கொண்ட, முன்பின் ஆராயும் திறனற்ற கன்னியர்கள் கையிலோ,

---

இன்ப சுகத்தை நாடுவது உயிர்களின் இயற்கை. நல்ல காட்சிகளைக் காண்பது கண்ணுக்கு இன்பம்; இனிய ஒலிகளைக் கேட்பது காதுக்கு இன்பம்; இன்சுவைப் பொருள்களை அருந்துவது நாவிற்கு இன்பம்; நறுமணங்களை நுகர்வது மூக்கிற்கு இன்பம்; மெல்லிய பொருள்களைப் பொருந்துவது உடலுக்கு இன்பம். இவ்வாறு கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், உடம்பால் நுகர்ந்தும் மக்கள் அடையும் இன்பமே இம்மாநிலத்தில் சிறந்த இன்பமாகும்.

காளையர்கள் கையிலோ கிடைத்தால், அஃது'குரங்குகைப் பூமாலையாக'ப் பயனபடுத்தப்பெற்று,நாட்டிலே இன்று நிகழும் ஒழுக்கக் குறைவான குற்றங்களை, நிறைக்குமேயன்றிக் குறைக்காது என்பது எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செய்தி.

மக்கட்செல்வத்தின் மாண்பைக் கூறவந்த முதற் பாவலர்,

குழலினிது யாழினிது என்பர்.
தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

என்கிறார். குழந்தைகளின் மழலை மொழிகள் குழலின் ஓசையைவிட, யாழின் நாதத்தைவிட இனிமையானதாம்! சிறப்புடையதாம்! கருத்தடை கண்காணிப்பாளர்களான இன்றைய ஏக இந்தியா வாதிகள் இவைகளை எல்லாம் எண்ணிப்பார்க்கவேண்டும். வான்புகழ் வள்ளுவனின் வாய்மொழியைக் கேட்க மனமில்லாத மதி மந்திரிகள்; அஹிம்சை யாளர், ஆசியாவின் ஜோதி, பஞ்சசீலத்தின் பிதா, பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு சொல்வதையாவது கேட்கவேண்டுமல்லவா? அவர் 'எதிர்கால இந்தியா இன்றைய இளஞ் சிறுர்களின் கையில்தான் இருக்கிறது' என்று போகுமிடமெல்லாம் பறையறை கின்றாரே! அதன் பொருளென்ன? எதிர்கால இந்நாட்டைப்பொன்னாடாக ஆக்கவிருக்கும் குழந்தைகளைக்கருவிலேயே கசக்கிவிடாமல் கண்ணும் கருத்துமாகக்காத்துவர வேண்டும் என்பதுதானே!

இன்றைய அறிவியற் கலையைத் தம்முள் அடக்கிக்கொண்டு உலகின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கும் இரஷ்யர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும், கருவளர்ப்பு கசக்காது! இனிக்கும். காரணம் அவர்கள் நாட்டிலே அதிகமான குழவிகளை ஈன்று புறந்தரும் பெற்ருேர்க்குப் பட்டங்களும், விருதுகளும், கேடயங்களும அவர்களது அரசினர் அளிக்கின்றனர்! எதற்காக அவர்தம் அரசினர் அத்தகையோருக்கு பரிசு தந்து, பாராட்டிப் பலவகையிலும் ஊக்குவிக்கிருர்கள் என்பதை நாம் சற்றுச் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இன்று அமெரிக்க விஞ்ஞானிகளும், இரஷ்ய விஞ்ஞானிகளும், விண்ணுலும் மண்ணுலும் ஈர்க்க முடியாத நடுவு நிலையில் வெற்றிடமொன்று இருப்பதை அவர்களது ஆராய்ச்சியால் கண்டு, ஆங்கே இருந்துகொண்டு சந்திரனையும், சூரியனையும் காண, மனிதனால் முடியுமா என்பதை அறிந்து கொள்ள நாய்களையும், குரங்குகளையும் வைத்து செயற்கைக்கோள்களை ஆகாயத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிருர்கள். இனிமேல் 'மனிதனையும் வைத்து வானகத்திற்கு அனுப்புவோம்' என்று கூறுகிருர்கள். மனித வாடையற்ற வான வெளியில் ஒருவன் இருந்துகொண்டு, எண்ணற்ற இன்னல்களுக்கு இடையில் வையகத்திற்கு, சந்திரனைப் பற்றியும், சூரியனைப்பற்றியும் செய்தி அனுப்புவதென்பது அனைவராலும் முடியாத ஒன்று. எதையும் தாங்கும் இதயம் படைத்த ஆயிரத்தில் ஒருவனுல்தான் அது முடியும்! எனவேதான், அவர்கள் அந்த ஆயிரத்தில் ஒருவனைக் கண்டு பிடிக்க, ஆயிரமாயிரம் மக்கள் பிறந்து வளர்ந்தால்,தான் முடியும் என்பதைத்தெளிந்தறிந்து, தகாத தீச் செயலான கருத்தடையைக் கண்டித்து, கருவளர்ப்பை வரவேற்கிருர்கள்!

மேலும் தங்களது இனமானது வையகம்வாழும்வரை, செயற்கரிய செய்துகாட்டி, சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்று நினைப்பவர்கள் அவர்கள். தாங்கள் வருந்திக் கண்டுபிடித்த உண்மைகளின் நன்மைகளைத் தங்கள் வழிவருவோரும் அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்கள். தாங்கள் இன்பமடைந்த ஒன்றிலே உலகமும் இன்பமடைய வேண்டும் என்று எண்ணுபவர்கள்!

இன்னும் கூறவேண்டுமானுல் இவர்களது அருத்தமற்ற கருத்தடை, கண்ணியக் குறைவானது; இயற்கைக்கு முரணுனது; மருத்துவர்களால் மறுக்கப்படுவது; தமிழரின் நயக்கத்தக்க நாகரிகத்திற்கொரு தடையாகுவது; தாயினத்தைக் கேலி செய்வது; அகிலத்தை அழிக்கப் பிறந்த அழிவாயுதம் போன்றது என்று, எங்கும், எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கலாம்! குற்றமில்லை இதில்.

*

கைத்தறி

*****

கைத்தறி நெசவு நமது நாட்டில் மிகப் பெரிய குடிசைத் தொழில். இந்தப் பண்புடைத்தொழிலானது இயந்திரமில் தொழிலின் போட்டியைச் சமாளித்து உயிர் வாழ்ந்து வருகிறது. நமது தேசத்தில் சுமார் 26-இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. சுமார் 75-இலட்சம் மக்கள் இந்தத் தொழிலில் ஈடு பட்டிருக்கிருர்கள். இது பரவல் முறையிலுள்ளதொழில். தேசத்தின் பொருளாதாரத்தில் இத்தொழில் முக்கியமான பங்கு வகிக்கிறது. பஞ்சாலைத் தொழிலானது சுமார் 9-இலட்சம் பேர்களுக்குத்தான் வேலைவசதி அளிக்கிறது. அதில் நெசவுப் பிரிவில் வேலைசெய்வோர் சுமார் 2-இலட்சம் பேர்கள் மட்டுமே. மொத்தத் துணி உற்பத்தியில் 25-சதவிகிதம் கைத்தறிகள் மூலம் உற்பத்தியாகின்றன. வேலைப்பாடு நேர்த்தியில் கைத்தறித் துணிகள் சிறந்து விளங்குகின்றன என்பது யாவரும் அறிந்ததே. கைத்தறித் தொழிலுக்கு நெருக்கடி ஏற்படுமானுல் இத்தொழிலை நம்பி வாழும் பெரும்பாலான மக்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டமும் பெரும் துன்பமும் ஏற்படும்.

—"புது வாழ்வு"

சாதித் திமிர் சாய்ந்தது

தென்னவன்

திருவாளர் முருகேச முதலியாரை எல்லோரும் "உழைப்பால் உயர்ந்தவர்" எனப் பாராட்டினர். தவிரவும் அவரைப் பல புதிய பிரமுகர்களும் அறிவர். காரணம் அவர் ஓர் புது அரசியல்வாதி.

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், வீட்டில் எல்லோரும் மாலைப் படக்காட்சிக்குச் சென்றிருந்தனர். முருகேச முதலியார் மாத்திரம் தனியே ஒரு குறிப் பேட்டைப் புரட்டிக்கொண்டு, மனதிற்குள் சிலரைத் திட்டிக் கொண்டிருந்தார். ஆம், அவர்கள் அனைவரும், முதலியாரிடம் கடன் வாங்கி இருந்த நல்லவர்கள்.

சங்கரன் அவரருகில் சென்று 'மாமா' —என்றான், மிக மெல்லிய குரலில்

'மாமா' — என அழைத்த அக்குரலினைக் கேட்டதும் முதலியார், தேள் கொட்டிய திருடன்போலானார். ஆச்சரியத்துடன் பார்த்தார். "யார்டா நீ?" என்று கேட்டுக்கொண்டே தன் கையிலிருந்த பேரேட்டைப் "படார்" என்று மூடினார். இது சங்கரனுக்கு, ஒருபெரிய இடி விழுந்தது போல் இருந்தது. நடுங்கிவிட்டான்.

"டேய் யாரு நீ?" என்றார் மீண்டும் ஒருமுறை--கடன் வாங்கியவர்கள்மேல் நினைவினை வைத்திருந்தவர்.

"நான் உங்கள் தங்கை சுந்தரியின் மகன்" என்று தன்னை அறிமுகப்படுத்தினான். அவன் கூறிய பதிலில், அவருக்கு மருமகன் என்ற உறவு இரத்த பாசத்துடன் வெளிப்பட்டது.

"ஓஒ...சரிசரி! வாவா! இப்போ நீ நெல்லையிலிருந்துதானே வர்றே? உங்க அப்பன் சுகமா?"

"இல்லை! அப்பா இறந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. இப்பொழுது நான்தான் இங்கு வந்துள்ளேன். இங்குள்ள தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாமென எண்ணுகின்றேன். அதற்கு உங்களுடைய உதவி சிறிதளவு கிடைத்தால் மிகவும் நல்லது" என்று தன் எதிர்காலத் திட்டத்தைப் பேரவாவுடன் கூறினான்.

இப்போது முதலியார் குமுறும் எரிமலையானார். அவரது உள்ளம் கொந்தளிக்கும் கடல்போல் ஆனது. அவரது கண்கள் செந்தழலிலும் சிவந்தன.

"நான் என்ன கோடீசுவரனா? முன்பு உன்னை ஹைஸ்கூலில் படிக்கவைக்கப் பணம் தாருங்கன்னு" உன்னப்பன் வந்தான். இப்போ நீவருகின்றாய். என்கிட்ட எந்த உதவியும் கிடைக்காது. நான் உன் அம்மாவை மறந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. எனக்கு ஒரு தங்கை இருந்தாள் என்பதையே தலைமுழுகிவிட்டேனே. மானம் மரியாதை எதுவும் பாராமல் என்றைக்குச்சுந்தரி அந்தக்கீழ்ச்சாதிப் பயகூடப் போனாளோ, அன்றைக்கே நான் அவளை மறந்துவிட்டேன்டா! இப்பொழுது நீ எந்த முகத்துடன் என்னைப் பார்க்க வந்தாய்? கீழ்ச்சாதிக்காரப் பய மகனுக்கும் எனக்கும் என்னடா உறவு? தங்கச்சி மகனாம்!

டேய்! கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன், என்னிடம் எந்த உதவியும் கிடைக்காது. நான், நாளெல்லாம் துன்பப்பட்டுவிட்டு, இப்பதான் நாலுபேர் மதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறேன். இந்நிலையில் நீ, உன்னை என் மருமகன் எனச்சொல்லி என் மானத்தை வாங்கிடாதே. என் வாழ்வில் குறுக்கிடாதேடா— குறுக்கிடாதே" என இரைந்தார்.

சங்கரன் ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டான். அவன் தனது மாமாவைக் காண வரும்பொழுது எவ்வளவு நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் வந்தானோ, அவ்வளவும் வீணாயின. அவனது உள்ளம், அமைதியாகக் கிடந்த நீர்ப்பரப்பின்மீது கல் விழுந்தால், அந்நீர்ப்பரப்பு எவ்வாறாகுமோ அவ்வாறு குழம்பியது.

அவனது உள்ளத்தின் நிலையை அறிவிப்பதுபோல், இரவு வானம் கடுமையான இருட்டுடன், மின்னல் ரேகைகளையும், ஆங்காங்கே காட்டிக்கொண்டிருந்தது. முதலியாரின் கொடிய உள்ளத்தைக் கண்டுதானோ என்னவோ, அன்று வானத்தில் ஒரு விண்மீன்கூடத் தோன்றவில்லை. அவனது உள்ளத்து நம்பிக்கையைப் போக்க அவன் மாமா இரைந்ததுபோல், மழையைக் கெடுக்கும் பேய்க் காற்றும் விர்விர்ரென பேரிரைச்சலுடன் வீசியது. இந்தச் சூழ்நிலையில்தான் சங்கரன், செல்லும் வழியறியாது, தன் கால் சென்றபடி சென்றான்.

*

இப்பொழுது சங்கரன் ஒரு அனாதைதான். அவனது தாய், அவன் உயர்நிலைப்பள்ளியில் நுழைந்ததுமே, காலராவிற்குப் பலியானாள்.

*

முன்னர் தான் வேலை பார்த்த வழக்கறிஞரின், இல்லத்திற்கு எதிர் வீட்டில் இருந்த சுந்தரியை, அடிக்கடி காணும் வாய்ப்பைப் பெற்றார் — பரமசிவம். இருவரும் காதலித்தனர். :திருமணமும் செய்துகொண்டனர்.

அப்போது சுந்தரி தன் குடும்பத்தின் ஏழ்மையை நினைந்து நினைந்து வருந்தினாள். ஏழ்மையின் காரணமாய்த் தன்னைச் சமுகத்தவர் வெறுத்து ஒதுக்கியதைக் கண்டு துன்புற்றாள். அந்தக் கொடுமையிலிருந்து விடுபடவும், தன் ஒரே அண்ணனுக்குச் சுமையாய் இருக்க மனம் இல்லாமலும்தான், சுந்தரி, பரமசிவத்துடன் வாழ விரும்பி—மாலை சூடினாள்.

ஆனால் அந்த நல்ல செயல் முதலியாருக்கு ஒப்பவில்லை. காரணம், மனிதனது பகுத்தறிவைக் கெடுக்கும் சாதியை,—அவனை மனித நிலையிலிருந்து மிருக நிலைக்குக் கொண்டுவரும் சாதியை— அவனது உள்ளத்தில் தோன்றும் அன்பை--அறத்தைக் கெடுக்கும் பொல்லாத சாதியை — நம்பினார். அதற்கு அடிமை ஆனார்.

அவர் தனது வறுமையைக் கூட இழிவாக எண்ணாமல், தன் ஒரே தங்கைக்கு உரிய காலத்தில் வாழ்வு தரமுடியாததைக்கூட இழிவாக எண்ணாமல், அந்த மங்கை நல்லாள் செய்த செயலை இழிவாக — சமுகத்துரோகமாக எண்ணினார். இன்றும் கூட நம் தமிழகம் சாதியை விடவில்லையே! ஒவ்வொருதேர்தலின்போதும் ஆட்சியாளர் அதை வளர்க்கின்றனரே.

பரமசிவம்—சுந்தரி, இவர்களின் அன்பு வாழ்க்கையின், இன்பப் புதையலாய்த் தோன்றியவன் தான் சங்கரன். அவனைப் பரமசிவம், வளர்க்கும்போது, தான் ஒரு ஏழை என்பதைக் கூடக் கருதவில்லை. தனது இருபத்தைந்து ரூபாய் வருவாயை, இருநூற்றைம்பது ரூபாயாக எண்ணிக்கொண்டு, தாராளமாய்ச் செலவழித்தார். அவரது நல்லொழுக்கத்தின் பயனாக, நண்பர்களிடம் கடன் கிடைத்துவந்தது. அந்தப் பொருள் தான், சங்கரனைப் பள்ளி இறுதி வகுப்புவரை படிக்கவைக்க அவருக்கு உதவியது.

சங்கரனது அறிவின் திறத்தைக் கண்ட பரமசிவம், அவனை முதன் முதலில் இவ்வுலகில் கண்டபொழுது பெற்ற இன்பத்தை விடப் பன்மடங்கு அதிக இன்பத்தைப் பெற்றார்.

சங்கரன் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதப் போவதற்கு இரு நாட்களுக்கு முன், என்றும்போல் அன்றும், காலை நான்கு மணிக்குப் படிக்க எழுந்தான். அப்பொழுது நடுவீட்டில் ஒரு உருவம் தொங்குவதைக் கண்டு திடுக்கிட்டான். ஆம், அவன் அப்பா—மானமுள்ள தமிழ் மகன்—தன் மகன் மீது அளவற்ற அன்புகொண்ட, அன்புத் தந்தை பரமசிவம் பிணமாகத் தொங்கினார்.

அப்பாவின் பிணத்தைக் கண்ட அவன் கோவெனக் கதறினான். 'அப்பா... அப்பா' எனக் கூவிக்கொண்டு, அனலிற் புழுவெனத் துடித்தான். அழுது அழுது செயல் மறந்தான். அவனது இரைச்சல் கேட்டு வந்த பக்கத்து வீட்டாரெல்லாம், அவனது அவலநிலை குறித்துப் பரமசிவம் மீது 'கையாறு நிலை மொழி' கூறினர். அக்கூட்டத்தில் ஒருவர், பரமசிவம் சட்டைப்பையிலிருந்து ஒரு முடங்கலை எடுத்து, அதில்:—

"அன்புள்ள என்னருமைச் சங்கருக்கு!

"நான் உனக்கு ஒரு குறையும் வைக்காமல், உன்னை நல்ல முறையில், உன் அம்மாவின் வேண்டுகோளின்படி, படிக்க வைத்துவிட்டேன்.

உன்படிப்பைப் பள்ளி இறுதி வகுப்புடன் நிறுத்த எண்ணியிருந்தேன். ஆனால் நீ தமிழ் கற்க மிகமிக விரும்புகின்றாய் என்பதைக் கண்டு, என் உள்ளம் மிக மகிழ்கின்றது. ஆகவே உன் விருப்பத்திற்குத் தடையாய் இருக்க விரும்பவில்லை.

நான் உயிருடன் இருந்தால் படிப்பின் பொருட்டு நீ இடர்ப்படுவதை என்னால் சகிக்க இயலாது. மேலும், சாதி வெறி எனும் நச்சுக்கருத்தினைப் பெற்றுள்ள இச்சமுகம் என்னால் உன்னையும் வாழவிடாது. ஆகவே நான் இம் முடிவுக்கு வந்தேன்.

நீ நமது சிறு வீட்டை விற்று கடன் தந்தவர்கட்குக் கொடுத்துவிடு. அதற்கான விவரம் இதோடு இருக்கின்றது. பின்னர், மதுரையில் உள்ள உன் அம்மாவின் அண்ணாவிடம் சென்று, உதவிபெற்று, உன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள். நான் இறந்துவிட்டதால், அவர் உனக்கு உதவுவார் என எண்ணுகின்றேன். என்னைப்பற்றிக் கவலைகொள்ளாதே. நீ நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ்ந்து, நான் உன்னைப்பெற என்ன தவம் செய்தேனோ என ஊரார் மெச்சும் வண்ணம் வாழ்க்கையை நடத்து. ஒழுக்கம் உயிரினும் பெரிதென்பதை மறவாதே. வாழ்க நீ பல்லாண்டு.

இப்படிக்கு,
உன்னைப்பிரியும் கல்நெஞ்சன்,
பரமசிவம்.

என்பதைப் படித்து முடித்தார். அவரது கண்களும் தன் கண்ணீரை வடித்தது, சங்கரனுக்காக அனுதாபப்பட்டது. ஆம, இத்தகைய நிகழ்ச்சிகள் யாராலும் தாங்க முடியாததுதானே!

இவ்வாறு தேர்வு நேரத்தில் தனக்குக் கிடைத்த ஒப்பற்ற பரிசாகிய சோகத்தைத் துணையாகக் கொண்டு தேர்வை எழுதினான். அவனது அறிவில் மயங்கிய வெற்றிச் செல்வியும் அவனை அணைத்துக்கொண்டாள்.

வெற்றிபெற்ற சங்கரன், தலைமை ஆசிரியரின் பொரிசு முடங்கலுடன் தன்னம்பிக்கையை மட்டுமே துணையாகக்கொண்டு மதுரைக்கு வந்தான்--மாமானைத் தேடி. அப்போதுதான், முருகேச முதலியார் அவனை விரட்டினார்—சாதித்திமிர் பேசி. ஏழையே சாதியைக் கொண்டாடும் பொழுது அவர் சாதியை விடுவாரா?

ஆனால் தலைமை ஆசிரியரின் முடங்கல் அவனுக்குக் கல்லூரியில் ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்துவிட்டது--அவனுடைய அறிவின் திறத்திற்காகவும், நன்னடத்தைக்காகவும்.

*

காலமாகிய கடமையாளி மிகமிக விரைவாகத் தன்வேலையை முடித்தான். அவன் நாட்டு மாந்தரிற் சிலரைப்போல் சோம்பேறி இல்லையல்லவா! ஆண்டுகள் மூன்று மறைந்தன.

நான்காவது ஆண்டில், வித்துவான் இறுதியாண்டு வகுப்பில், முதல் மாணவனாக, சங்கரன் பயின்றுகொண்டுள்ளான்.

கல்லூரியிற் சேர்ந்த ஆண்டிலிருந்து அவன், இலக்கியக் கழகச் செயலாளன். அங்கு சிறந்த பேச்சாளன், எழுத்தாளன், நடிகனும்கூட அவன்தான். நாடகங்களில் அவனுக்குத்தான் முதற் பரிசு.

ஆகவே அவன் மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் போலவும், ஆசிரியர்கட்கு ஒரு தோழன் போலவும் ஆனான். முயற்சி திருவினையாக்கத்தானே செய்யும்.

கல்லூரியில் கிட்டிய அநேக நண்பர்களில் அவன் சுசிலாவை மட்டும் மறக்கவே முடியாது. ஏனெனில் அவள் பணம் படைத்தவள். ஆனால் பணத்தால் வரும் செருக்கு இல்லாதவள் — நல்லவள். தமிழ் படிக்கும் மாணவியல்லவா! கண்டிப்பாய் வள்ளுவம் அவள்குணத்தைமாற்றியிருந்தது.

ஒருமாதச் சாப்பாட்டையே விழுங்கிவிடும் விலை உயர்ந்த நூல்களாகிய சீவகசிந்தாமணி, உதயணன் சரித்திரம் போன்ற சில நூல்களெல்லாம் அவள் உதவியால்தான் சங்கரனால் வாங்க முடிந்தது.

இவ்வாறு ஏற்பட்ட அவர்களது நட்பு அவர்களிடையே காதலாய்க் கனிந்தது. சுசிலா தனக்கு விளங்காத சில ஐயங்களை

சங்கரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வாள். இதுதான் அவன் அவளுக்குச் செய்யும் கைமாறு.

ஒருநாள் காலையில் இருவரும் இறுதித்தேர்விற்காகப் படித்துக் கொண்டிருந்தனர்—கல்லூரிப் பூங்காவில். அப்போது மிகுந்த கவனத்துடன் அதிக நேரம் படித்த களைப்பு நீங்கச் சிறிது பேச முனைந்தனர்.

"சுசிலா இன்னும் சில நாட்களுக்குப்பின், இப்படி நாம் ஒன்றுக்கூடிப் பயில முடியுமா? அன்றி ஒருவரையொருவர் பார்க்கத்தான் இயலுமா?'' என்றான் சங்கர்.

"என்ன சங்கர்! இப்படிக் கூறிவிட்டீர்கள்? நீங்களோ அன்றி நானோ, அல்லது நாமிருவருமோ இவ்வுலகைவிட்டு மறைந்திடுவோமா?''

"கண்டிப்பாக இவ்வூரைவிட்டு மறைந்திடுவேன் நான். இக்கல்லூரியைவிட்டு மறைந்திடுவோம் நாம். சரிதானா?''

"சங்கர்! நாம் விரும்பினால் பிரியாமலே இருக்க முடியாதா?''

"எவ்வாறு? இவ்வாண்டுத் தேர்வில் தோல்வி அடைவதா?'' என்று குறும்பாகக் கேட்டான் சங்கர்.

போங்கள் சங்கர்! குறும்புப் பேச்சைப்பார்! இந்த ஆண்டுத் தேர்விலும் வெற்றி. அதனை அடுத்து நம் வாழ்க்கைத் தேர்விலும் வெற்றி. பின்னர் நமது பிரியாமை! என்று கூறினாள் சுசிலா.

"சுசிலா! உன் அன்பிற்கு நன்றி. ஆனால் நான் ஏழை...அனாதை... சாதி தெரியாதவன்...நீ''

"உயர்ந்தசாதி. பணக்காரர் மகள். ஆகவே உன் அப்பா, உன்னை எனக்குக் கொடுக்கமாட்டார். நாமும் வாழ்க்கைத் தேர்வில் வெற்றிபெற மாட்டோம்'' என்று கூறுவீர்கள், இல்லையா சங்கர்?''

"உண்மையும் அதுதானே சுசிலா! இன்றைய உலகம் அறிவையா மதிக்கின்றது? உண்மைக்கா முதலிடம் அளிக்கின்றது? ஆடம்பரமான உடை, கள்ள ஒழுக்கம் இவற்றைத்தானே மதிக்கின்றது. அதற்குத்தானே வரவேற்பும் வாழ்த்துமதருகின்றது''

இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்ற ஔவையின் இருசாதிகளையும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' — என்ற வள்ளுவப் பெருந்தகையின் மனிதசாதி ஒன்றையும் நீங்கள் அறியவில்லையா? தமிழ் இலக்கியங்கற்ற நீங்களா இவ்வாறு பேசுவது? இது...

"தகுமா? நீதியா? என்பாய் சுசிலா! நீ "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" எனும் மறையினைத் தந்த தமிழ்க்குடி மகள். ஆனால் உன் தந்தை மனுநீதி பெற்றெடுத்த இந்து மதத்தில் ஒருவர் அல்லவா! மதம் எனும் மதுவைக் குடித்து அதன் போதையிலே மயங்கி இருப்பவரல்லவா!''

"அவர் ஒரு இந்து என்றாலும், எனக்கு அப்பா. அவருக்கு நான் ஒரே மகள். என் சொல்லை என்னப்பா மீறமாட்டார். நான் எப்படியும் உங்களுக்குத்தான். ஏற்றுக்கொள்ளுவீர்களா? சங்கர்!'' என்றாள் மிகுந்த நாணத்துடன்.

"எனக்கு அந்த வாய்ப்பெல்லாம் கிட்டுமா?''

"அப்படிக் கிட்டிவிட்டால்?'' கேட்டாள் சுசிலா. அவளது கேள்வி இதயத்தின் அடியிலிருந்து ஒலித்தது.

"உன எண்ணம்போல் நம் வாழ்வு வண்ணமாக அமைந்துவிட்டால், நான்...நான்...நான்...'' சங்கர் அதிக மகிழ்ச்சியால் சொல்வதறியாது திகைத்தான்.

அந்நேரம் இருவருமே நாணத்தின் பிடியில் அகப்பட்டுத் தவித்தனர். அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காகவே, பள்ளி மணியும் ஒன்பது அடித்து ஓய்ந்தது. மீண்டும் நூலுலகு சென்றனர்.

அன்று ஊரில் கல்லூரி மாணவர்களிடத்தில் ஒரே பரபரப்பு. தேர்வின் முடிவைத் தெரிவிக்கும் தினத்தாட்களும் வந்து சேர்ந்தன. சங்கரும் சுசிலாவும் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றிருந்தனர். சுசிலா முதல் வகுப்பில் வெற்றிபெற்றிருப்பதை அவளாலேயே நம்ப முடியவில்லை. இருவருக்கும் அன்று ஒரே மகிழ்ச்சியாய் இருந்தது—அமமுடிவு!

உடனே சுசிலா, சங்கரைத் தன் இல்லத்திற்கு அழைத்தாள். அப்பாவிடமும் அம்மாவிடமும் சங்கரை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் அவர்களின் ஒப்புதலைத் தன திருமணத்திற்குப் பெற்றிட எண்ணினாள். ஆனால் சங்கர் வர மறுத்துவிட்டான். மாலை மூன்றரை மணியளவில் வருவதாகக் கூறினான்.

மாலை சுசிலாவின் இல்லத்தின் முன் வாயிலில் இருவரும் இறங்கினர் — ஒரு ஜட்கா வண்டியிலிருந்து.

சங்கரன் சுசிலாவின் வீட்டைக் கண்டதும், உள்ளே செல்ல மனம் இன்றிப் பின்வாங்கினான். சுசிலா மகிழ்வுடன் அவனை "வாருங்கள், வாருங்கள்'' என அழைத்தாள். முன் கூடத்தில் மகளின் குரல் கேட்டு முருகேசனாரும் எழுந்து அங்கு வந்தார்.

வாயிலில் சங்கரனைக் கண்டதும், தீயை மிதித்தவர்போல் திடுக்கிட்டார். இவர்கள் இருவரது செயலையும் கண்ட சுசிலா திகைத்தாள். "ஏன் அப்பா இருவரும் பகையாளிபோல் நடந்துகொள்ளுகின்றீர்கள்?'' என்றாள வியப்புடன். "இவர்தான் அப்பா நான் காலையில் கூறிய என் நண்பர்'' என்றாள்.

முருகேச முதலியார், தன் மருமகனின் அறிவுத் திறமையையும், விடா முயற்சியினையும் கண்டு, தான் செய்த மாபெரும் தவறை எண்ணி வருந்தினார்.

துக்கம் தொண்டையை அடைக்க, சுசிலாவைப் பார்த்து, "இவன், உன் சொந்த அத்தானம்மா. நெல்லையில் உனக்கு ஒரு அத்தை இருந்தாள் என்று கூறினேனே, அந்த உத்தமியின் மகன் தானம்மா இவன்? நாலு ஆண்டுகட்கு முன், வீடு தேடி வந்த இவனை, நான் பணத்திமிராலும், சாதித் திமிராலும் ஏசி விரட்டினேன். அன்றே இவன் இவ்வூரைவிட்டுப் போயிருப்பான் என எண்ணினேன்.

இன்று ஒரு தமிழ் அறிஞனாய், உன்னாலேயே என்முன் அழைத்து வரப்பட்டு, நிற்கின்றான். இவனது தமிழ்க் கல்வியின் முன், என் சாதித் திமிரும், பணத்திமிரும் எம்மாத்திரம் அம்மா! "சுசிலா நீ உன் அத்தானைத்தானம்மா மணந்துகொள்ளவேண்டும். அனாதைத்தானம்மா, நான் என மாபெரும் தவறுக்கான கழுவாயாக எண்ணுகின்றேன்'' — என்றார். அப்பொழுது அவர் கண்களில் நீர்த்திரை படர்ந்திருந்தது.

உடனே சுசிலா "அப்பாவை மன்னித்துவிடுங்கள் அத்தான்'' எனக் கூறிக்கொண்டு சங்கரன் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.



கைத்தறி வாரமும் 'கனம்'களும்!

கைத்தறி வாரம். தமிழகத்தின் தலைநகரிலே மட்டுமல்ல, தமிழக முழுவதிலுமே, கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

நாட்டியமும் நாடகமும், இன்னிசையும் இன்ன பிற கலை நிகழ்ச்சிகளும் குழைத்துக் கொடுக்கப்பட்டன! காங்கிரசாரின் கருத்து விளக்கங்களும் தரப்பட்டன!

காங்கிரசார் எவராயிருப்பினும்—ஆகஸ்டுப் புரட்சியிலே ஈடுபட்டு விழுப்புண் பெற்ற வீரராயினும், எதற்காகவோ இடையிலே புகுந்து ஏற்றம் பெற்றுத் திகழ்பவராயினும்—அமைச்சராயினும், அன்றி வேறெவராயினும்—அவர் தம் பேச்சினைக் கேட்க, ஆள் தேட வேண்டிய நிலையிருப்பதனை நாடறியும்! நாடறிந்த இந்த உண்மையினை மூடி மறைக்க இந்த ஆட்சியாளர்கள் எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகள் ஒன்றிரண்டல்ல!!

அந்த முயற்சியிலே ஒன்றுதான் கலை நிகழ்ச்சியோடு கலந்து, கருத்துப் படையல்கள் அளித்திடுவது! அங்ஙனம் மூடி மறைக்கின்ற 'கைத்திறத்தை' மறைக்கின்ற 'கைத்திறத்தை' கைத்தறி விழாவிலே நாடே கண்டது!

கலை நிகழ்ச்சிகள் இதுபோன்ற விழாக்களிலே தேவையற்றவை என்று கூறுமளவுக்குக் கருத்துக் குருடர்களல்ல நாம்.

மக்களின் கருத்தினைக் கவரவும், அவர்தம் கவனத்தை ஈர்த்திடவும், நாட்டியம் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள், தேவையானவை என்று, கைத்தறி விழாவினை ஏற்பாடு செய்தவர்கள், கருதியிருக்கக்கூடும்—தவறில்லை,

ஆனாலும் கைத்தறி விழாவினைக் கண்டு அதிலே பேசப்பட்ட பேச்சுக்களையும் கேட்டு, கடைசியிலே கலை நிகழ்ச்சிகளையும் ரசித்துச் செல்லும் ஆயிரமாயிரம் மக்களது உள்ளத்தில் என்ன கருத்துத் தோன்றக்கூடும் என்பதிலேதான், விழாவினுடைய வெற்றி தோல்வி அடங்கியிருக்கிறது.

நாட்டியமாடிய நங்கையின் திறம் குறித்தும் அவள் பதம்பிடித்த நேர்த்திபற்றியும், அபிநயத்திலே அவள் காட்டிய ஆற்றல்பற்றியும், விழி சுழன்றதையும், இடை நெளிந்ததையும், விழாவினைக் கண்டுவந்தோர் விமரிசனம் அளித்திடுவரேல், கைத்தறி விழா வெற்றியடைந்ததாகக் கருதவா முடியும்.

சி. என். ஏ.

கைத்தறிப் புடவையின் நேர்த்தி, வேட்டியின் உயர்வு இவை குறித்துப் பேசாமல் ஜிப்சி நடனம் நன்றாக இருந்ததா, மயில் டான்ஸ் மனதைக் கவர்ந்ததா, நாட்டியமாடிய நங்கையின் திறமை பாம்பு நடனத்திலே வெளிப்பட்டதா, பரத நாட்டியத்திலே விளங்கிற்றா, என்ற ஆராய்ச்சியிலே இறங்கிடுவரேல், கைத்தறி விழா எப்படிப் பயனுள்ளதாக ஆக முடியும்?

"டான்சுன்னா இதுன்னா டான்சு! பகுப் பிரமாதம் போங்கோ! பம்பரமான்னா சுத்தரு'' என்றொரு ரசிகர், தான் ரசித்ததை வெளியிட—"என்ன ஓய்! இப்படிச் சொல்றேள்! டான்சா இது! சுத்த அபத்தமான்னா இருந்தது! பதம் பிடிக்கத் தெரியல்லே. அபிநயத்திலே அஷ்டசூன்யம்! எங்க அத்திம்பேர் பொண்ணு அம்புஜா இருக்காளோன்னோ, அவ ஆடுவா பாருங்கோ...'' என்று மற்றொருவர், நாட்டியத்தோடு தனக்கிருக்கிற தொடர்பை வெளிப்படுத்திட வேண்டும் என்ற ஆர்வத்தில் விளக்கமளித்திட—"என்ன ஆட்டமப்பா, என்ன ஆட்டம்! கண்கள் சுழன்றனவே, அதற்கே கோடி கோடியாகக் கொட்டித் தரலாம்! ஆகா! அந்தக் கண் ஒளியும், நடை நளினமும், இடை நெளிவும்......'' என்று ஒரு காளை, உள்ளத்திலேற்பட்ட புல்லரிப்பை, சொற்றொடர்மூலம் படம்பிடித்துக் காட்ட—"இடையா, இருந்ததா, உண்மையா?'' என்றொருவன் அடுத்த கட்டத்திற்குத் தாண்ட—இப்படிப் பலப்பலர், நடனம் பார்த்துவிட்டு வருவோரில்!

அவர்தம் உள்ளத்தில் கலை நிகழ்ச்சிகள் பெறுகின்ற அளவு, கைத்தறித் துணிகள் இடம் பெறுவதில்லை.

அங்ஙனமிருக்க, கைத்தறி விழாவினைக் காண ஆயிரமாயிரம் பேர் சென்று வருவதாலே என்ன பயன் விளைந்துவிடப்போகிறது?

கலை நிகழ்ச்சி இடம் பெறுகின்ற எந்த விழாவும் இப்படித்தான் ஆகுமென்பதல்ல! எதையும் அளவறிந்து செய்திடின், இத்தகைய ஆபத்து, தவிர்க்கப்படக்கூடும்!!

ஆனால் கைத்தறி விழாவினை ஏற்பாடு செய்தோர்! எல்லைக் கோட்டுக்குள்ளே நின்றுவிடாமல், கலை நிகழ்ச்சிகட்கே முக்கியத்துவம் கொடுத்துவிட்ட காரணத்

தாலே, விழாவின் மூலம் கிடைத் திருக்கவேண்டிய நற்பலன் கைநழுவவிடப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென்பதிலும், அந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளோர் தம் அவலம் போக்கப்படவேண்டும், அவர்தம் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும், வாழ்வு வளம் பெற்றதாக வேண்டும் என்பதிலேயும், நாம் நெடு நாட்களாகவே கவனம் செலுத்தி வருகின்ற காரணத்தால், நம்மால் இயன்ற உதவிகளையும் செய்துவந்திருக்கின்ற உரிமையோடு, இந்த விழாவின் பலாபலனை ஆராய்ந்திடக் கடமைப்பட்டிருக்கிறோம்-கருத்து அறிவிக்கிறோம் — குறை தவிர்க்கப்பட வேண்டும் என்று கூற விழைகின்றோம்.

கைத்தறித் துணிக்கு நாடெங்கிலும் ஆதரவுதேடும் பொருட்டு நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளையும், அவை தந்திருக்கிற பலனையும், சாதாரணமானவை என்று எவரும் கருதிவிட முடியாது.

அதே சமயத்தில் நாம் மட்டுமல்ல, நாடே எண்ணிப்பார்க்கிறது கைத்தறியாளர்தம் துயர் தீர நமது அமைச்சர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் என்ன என்று.

கைத்தறியை நாங்களும்தான் ஆதரிக்கிறோம் என்கிறார்கள் அவர்கள். "புதிய புதிய ரகங்களை உற்பத்தி செய்யுங்கள், அப்போதுதான் தொழில்வளர்ச்சியடையும்" என்று அவ்வப்போது யோசனை கூறுகிறார்கள். இதோ எம்போரியங்களைத் திறந்துவிட்டோம், காலனிகளைக் கட்டிவிட்டோம், கூட்டுறவு நிறுவனங்களை அமைத்துவிட்டோம் என்று பட்டியலும் தருகிறார்கள், சென்றவிடமெல்லாம்.

அமைச்சர்களது பேச்சுக்களிலே குறைபாடு காணவில்லை நாம். யோசனைகள் வழங்குவதிலே அவர்கட்கிருக்கின்ற உரிமையை, ஆற்றலினை நாம் மறுக்கவில்லை — குறைவாக மதிப்பிடவுமில்லை.

ஆனாலும், கைத்தறித் தொழிலுக்கு நிலையானதோர் ஆதரவைப் பெற்றுத்தர, தறியாளர்தம் அவலத்தைப் போக்கிட, ஆட்சியாளர் இதுவரை எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள், நடவடிக்கைகள் என்ன?

கரண்டியில் பாலை வார்த்து குழந்தைக்கு ஊட்டுவதைப்போல், சிறு சிறு உதவிகளைச் செய்கிறார்களே தவிர, நிலையான ஒரு ஆதரவை எங்கே தந்தார்கள்?

பசியிலே துடிப்பது பச்சிளங் குழந்தையாயிருப்பின், கரண்டியிலே பால் ஊற்றிக்கொடுக்கலாம். பெரியவர்களுக்கும் அதே முறையைக் கையாண்டால் என்ன பொருள்?

கைத்தறித் தொழில் மிகப் பெரியதோர் தொழில் — பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் அதை நம்பி வாழ்கின்றன — பல இலட்சக் கணக்கானோர் அதிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

நிலைமை அங்ஙனமிருக்க, அவ்வப்போது சிறு சிறு உதவிகளையும் சலுகைகளையும் தருவதாலே அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்புத் தந்ததாக எப்படி ஆகும்?

சிறு சிறு உதவிகளின் மூலம் கைத்தறித் தொழில் வளர்ந்துவிடப்போவதில்லை—அதை நம்பியிருக்கின்ற பல இலட்சக்கணக்கானோரது வாழ்வு மலர்ந்துவிடவும் போவதில்லை.

ஏற்கனவே கைத்தறித் துணி விற்பனைக்கு ரிபேட் அளித்திட வேண்டுமென்று டில்லி மூலவரிடம் அடிக்கடி, 'பவதி பிட்சாந்தேஹி' என்று போய்வந்த வண்ணமிருக்கிறார்கள், நமது பரிதாபத்துக்குரிய அமைச்சர்கள்! அந்தப் 'பிச்சை'யும், விரைவிலே நிறுத்தப்படக் கூடுமென்று விஷயமறிந்தோர் கூறுகின்றனர்.

அப்படியானால், கைத்தறித் தொழிலின் எதிர்கால நிலைதான் என்ன? கைத்தறித் துணிகளுக்கும், ஆலையிலே தயாராகின்ற துணிகளுக்குமிடையே இருக்கின்ற போட்டி தவிர்க்கப்பட, நமது ஆட்சியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அதிக முக்கியத்துவமும், அரசாங்கத்தின் ஆதரவும் பெறப்போவது, கைத்தறித் தொழிலா, அன்றி ஆலைத் தொழிலா? அல்லது இரண்டுமே இருக்கட்டும், இருக்கிறபடியே இருக்கட்டும் என்று விட்டுவிடப் போகிறார்களா?

கைத்தறித் தொழில் நீண்ட நாட்களுக்கு இருந்திட முடியாது, பாதுகாப்புப்பெற முடியாது, என்று இப்போதே காங்கிரசுத் தலைவர்களுக்கிடையே ஒருகருத்து நிலவி வருகிறது. இல்லையென்றால் 'அம்பர் சர்க்கா'வுக்கு ஆதரவு தேடப்படுவானேன்? அதைப் புகுத்திடும் முயற்சியில் ஈடுபடுவானேன? கைத்தறி வேண்டாம் என்று வெளிப்படையாகக் கூறத் துணிவில்லாமல், அதை அழித்திடும் முயற்சியில் மறைமுகமாக அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதைத்தவிர வேறென்ன பொருள் இதற்கு?

கைத்தறித் தொழிலுக்கு ஏற்படுகிற நலிவு, மிகச் சாதாரணமானதோர் பிரச்சினையல்ல! அந்தத் தொழில் தேய்ந்தால், பல இலட்சக்கணக்கானோரின் வாழ்வு தேயும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும்.

அவர்களுக்குப் புதிய தொழில்களை, தொழில்துறைகளை வாய்ப்புகளை அமைத்துத் தருவதற்கென்று, நமது ஆட்சியாளர்களின் கரத்திலே இருக்கிற திட்டமென்ன? பாவம், இல்லாமை கொட்டுகிறது, அரசாங்கத்தின் கஜானாவில் மட்டுமல்ல, கருத்திலும்!

எனவேதான் விழாக்களை நடத்தி, வேடிக்கைகளைக் காட்டி, கேளிக்கைகளைப் புகுத்தி, மக்கள் தம் கவனத்தை வேறு பக்கம் திருப்புகின்றனர், உருப்படியான எந்தமுயற்சியிலும் இறங்காமல்.

இந்தப் பிரச்சினையை நன்கு உணர்ந்துதான், ஆச்சாரியார் ஒரு திட்டம் சமர்ப்பித்தார்—அந்தத் திட்டம் தேவையானது என்று ஏற்றுக்கொண்டனர், பற்பல கட்சிகளைச் சார்ந்தோரும்.

ஆனாலும், அவர் திட்டத்தை டில்லி மூலவர்கள், நடைமுறைக்கு ஒவ்வாதது என்று விநோதமான தோர் காரணத்தைக்காட்டித் தூர எறிந்துவிட்டனர்.

ஆச்சாரியார் சொல்லுகிற எதையும் மறுப்பதையே மனதுக்கிசைந்ததாக, மகத்தான பணியாக, காங்கிரசுக்காரர்கள் இப்போதெல்லாம் கருதிவருவதாலே, அவரது திட்டத்தை நான் இங்கே எடுத்துச் சொல்லப்போவதில்லை!

நான் தரப்போகிற திட்டம், நமது நிதியமைச்சர் சுப்ரமணியத்தாலே தரப்பட்டிருப்பது.

"கைத்தறித் தொழிலின் வளர்ச்சியும், ஆலைத்தொழிலின் வளர்ச்சியும் ஒன்றுக்

கொன்று முரணானவை. ஆலைத் துணிக்கு எக்சைஸ் வரியைக் குறைப்பதன் மூலம் சலுகை தரப்பட்டால், அது கைத்தறித் தொழிலை வெகுவாகப் பாதிக்கிறது.

கலர் போட்ட புடவை, கரை போட்ட வேட்டி, இப்படிச் சில ரகங்கள் கைத்தறிக்கென்றே ஒதுக்கப்பட வேண்டும்.”

இதிலே சூக்ஷமமான கருத்து என்ன இருக்கிறதென்று கேட்கத் தோன்றும், இதைப் படிக்கின்ற எவருக்கும்.

இது சொந்தச்சரக்கா, அல்லது இரவல் சரக்கா என்ற பிரச்சினையை விட்டுவிடுவோம் — காரணம் ஆச்சாரியார் தந்த திட்டத்தின் மறுபதிப்புத்தான் இது என்பதனை நாடறியும், நாம் விளக்கத் தேவையில்லை.

நமது நிதியமைச்சரையும்நாடறியும். யார் எதைப் பேசினாலும், அதிலே குறை காண்பவர், புள்ளி விபரம் கொடுக்கப்படவில்லையே எனக் குற்றம் சாட்டுபவர்.

அவர் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறாரென்றால், புள்ளி விவரத்தையெல்லாம் கரைத்துக் குடித்துவிட்டுப் பேசுகிறாரென்று தானே நாம் கருத வேண்டியிருக்கிறது.

புள்ளிவிவரத்தை, ஆணித்திறமான ஆதாரங்களை அவர் தரமுடியும் என்பதனையும் எவரும் மறுத்திடவில்லை.

ஆனால், அவரும், அவர் இடம் பெற்றிருக்கிற அமைச்சரவையும் கைத்தறித் தொழில் வளர்ச்சி அடைய, அதிலே இருக்கின்ற சிக்கல்கள் தீர, அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பல இலட்சக்கணக்கானோரின் வாழ்வு வளம்பெற, இதுவரை எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன?

இதுவரை எந்த உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நம்மிடையே அவர் அள்ளி வீசுகின்ற ஆதாரங்களை, அளித்து வருகின்ற விளக்கங்களை, டில்லி மூலவரிடத்திலே எடுத்துக்காட்டி, அவர் ஏன் வாதாடக் கூடாது?

எத்தனை தடவை போகிறார் டில்லிக்கு! எதற்கும், எவருக்கும் அஞ்சாதவன் நானென்று நம்மிடத்தில் பேசும்போது அவர் காட்டுகின்ற துணிவில், நூற்றில் ஒரு பங்கு துணிவோடு, டில்லி ஆட்சியாளரிடம் வாதாடியிருந்தால் பலன் கிடைக்காமலா போயிருக்கும்?

மார்தட்டிப் பேசுவதையெல்லாம் தமிழ் நாட்டோடு நிறுத்திக் கொள்ளுகிறாரே. ஏன்?

வேறெவரையும் விட இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பு, வசதி, அத்தனையும் அவரிடம் இருக்கிறது--புள்ளி விவரங்களை அள்ளி வீச முடியும் அவரால்!

அவரிடம் நாடு எதிர்பார்ப்பது பிரச்சினை தீர வழி—புள்ளிவிவரங்களையல்ல!

எனவே அவரிடமும் அரசாங்கத்திடமும், நாடு எதிர்பார்ப்பது பிரச்சினை தீருவதற்கு உருப்படியானதோர் மார்க்கம்—வெறும் புள்ளி விவரங்களோ, உள்ளத்தை நெகிழவைத்திடும் கலை நிகழ்ச்சிகளோ அல்ல!

ஆனாலும் என்ன செய்ய? அவர்கள் கவனம் கண் கவர் காட்சிகள் இவையிவை என்று தேடிப் பிடித்துக் கண்ணுக்கு விருந்தளிப்பதிலேதான் இருக்கிறதே தவிர, கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைப்பதிலா இருக்கிறது!!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னைப் புண்படுத்தியவர்களைப் பழிக்குப்பழி வாங்கி, தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளவே, காட்டு மனம் படைத்தவர்கள் இறங்கி இருப்பார்கள். லிங்கன் அப்படிச் செய்யவில்லை. அவருடைய பணியும் இலட்சியமும், இதுபோன்ற சில்லறைகளில் அவருடைய சிந்தனையைச் செலுத்தவிடவில்லை! ஒரு நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு அவரிடம் இருந்தது; ஒரு நாட்டை வழிகாட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பை அவர் பெற்றிருந்தார்; நாட்டுக்கான நலன்களைப் பல வழிகளிலும் தேடவேண்டிய இடத்திலே இருந்தார். யார் தன்னைச் சொல் கொண்டு பொசுக்கினாரோ, அவரையே ஒரு பொறுப்பான இடத்தில் வைத்ததன் மூலம், அவர் தன்னை ஒரு உன்னத இடத்திலே, இருத்திக் கொண்டார்! லிங்கனை, இதுபற்றி கேட்டபோது, அவர் சொன்னாராம், “ஸ்டான்டன் என்னைத்தான் அவமானப் படுத்தினார்; ஆனால் அவருடைய மூளைபலம், என் நாட்டுக்குத் தேவை. நாட்டுக்குச் சேவை செய்யும் இடத்தில் நானிருக்கிறேன். என் சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக்கொள்ள அல்ல நான் இந்தப் பதவியிலிருப்பது.”

இப்படிப்பட்ட அருமையான பெருந்தன்மையைக் கொண்டிருந்ததால்தான், இன்று உலகமெல்லாம் அவர் புகழ்பாடுகிறது; அவர் நினைவைக் கொண்டாடுகிறது.

1809-ல் பிறந்தார் அவர். இன்று உலகெல்லாம், அவருடைய 150-வது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். சென்னையிலும் சர்.சி.பி.இராமசாமிஅய்யர் அவர்கள் தலைமைவகிக்க, பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் வரவேற்க, பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு, ஆபிரகாம்லிங்கனுடைய அருமை பெருமைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், இந்தக் கிழமை.

நிறவெறியைவேரறுக்கத்தன்னையே துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தத்தம் செய்த மாவீரர் லிங்கன். அவரைப் பற்றி, அறிவியக்கவாதிகள் நமது நாட்டில் நெடுங்காலமாகவே பேசி வருகிறார்கள். ஆபிரகாம்லிங்கனுடைய பெயர், நமக்கெல்லாம் ஒரு விடிவிளக்காகும்! அந்த உத்தமருடைய சிறப்பினை, இந்தப் பெரியவர்கள் கூடிப் பேசியதைக் கேட்டு உள்ளபடியே மகிழ்ந்தோம்!!

கவர்னராயிருந்த சந்தானம் அவர்கள் பேசியபோது சொன்னாராம், “ஒரு சாதாரண மனிதர், புனிதமான ஒரு இலட்சியத்தால் உந்தப்பட்டு உழைத்தால், எவ்வளவு பெரியவராகிவிட முடியும் என்பதற்கோர் எடுத்துக்காட்டு, லிங்கனுடைய சரிதம்”

சாதாரணமானதுகள் என்று ஒரு நல்ல இலட்சியத்துக்காக உழைப்போரைக் கருதலாம் பலர்! கண்டிக்கலாம்—ஏசலாம்! எனினும், உத்தமமான இலட்சியமும், அந்த இலட்சியத்தைச் சாதிப்பதில் அவர்கள் கொள்ளும் பொது உள்ளமும், எத்தகைய வெற்றியைத் தேடித்தரும் என்பதையே லிங்கனுடைய வாழ்க்கை உலகுக்கு உணர்த்துகிறது!!

★

மதி! மதி!!

"வண்டு"

"மதி! மதி!!" என்று கூவிக்கொண்டேவந்தான், என்தோழன்.

"மதி இங்கேயில்லேயப்பா! 'தென்னகம்' அலுவலகத்திலிருப்பார்!!" என்றேன், நான்.

"நான் அவரைச் சொல்லவில்லேயப்பா! என்னைக் கொஞ்சம் மதியேன்..." என்று கெஞ்சினான்.

"உன்னையென்ன? யாரைத்தான் நான் மதிக்காமலிருக்கிறேன்! ஏன் புதிதாக மதிக்கச்சொல்லி வந்து கேட்கிறாய்" என்றேன் நான்.

"நேரு சொல்லிவிட்டார்! அதனால், இன்று காலையிலிருந்து, யாரார் என்னை மதிக்கிறார்கள் என்று கணக்கெடுத்துக்கொண்டு வருகிறேன். யாரும் மதிக்கவில்லே" என்றான்.

"என்ன சதானந்தம்! உன்னிடம் படிப்புச் சொல்லிக்கொண்ட பையன்களே, அந்த ஊரில் ஆயிரத்துக்கு மேலிருக்குமே. உன தெருவிலேயே இருநூறு பேருக்கு மேலிருப்பார்கள். யாருமே உன்னை மதிக்கவில்லேயா!" என்றேன்.

"அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? ஒரு மனிதனே, அவனிடம் எவ்வளவு பணம் வைத்திருக்கிறான் என்பதைப் பார்த்து உலகத்தில் மதிக்கிறார்களே, இது என்ன மோசம்! பணத்தாலா ஒருத்தனுக்கு மதிப்பு வந்து விடுகிறது? சமூகத்திலுள்ள அந்தஸ்தல்லவா முக்கியம்! அதை நினைக்க மாட்டேன் என்கிறார்களே, என்ன உலகம்!"--என்று நேரு, வருத்தப் பட்டுக்கொண்டாரப்பா, என்றான்.

"நேருவை நீ எங்கே பார்த்தாய்!"

"பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு புதிதாகக் கவுரவம் செய்தார்களே டில்லியில் ஜனவரி 25ந் தேதி! அதற்குப் போயிருந்தேன். அங்கேதான பேசினார். உபாத்திமார்கள் வாங்குகிறசம்பளம்கொஞ்சமாயிருக்கலாம். அதை வைத்தா அவர்களை மதிக்கிறது? பணமா பெரிசு! அவர்களுக்கு இருக்கிற சமூக அந்தஸ்தல்லவா பெரிது என்றார். வந்ததிலேயிருந்து, யாரார் மதிக்கிறார்கள் என்று நானும் பார்த்துவர்றேன்...கடன கொடுக்கும் கந்தப்பனைப் போய்க் கேட்டேன், அதிகமாக இருநூறு ரூபா வேணுமென்று..."

"கதர்க்கடை வைத்திருக்கானே அந்தக் கந்தப்பன்தானே..."

'ஆமாம்! நேரு இப்படிச் சொன்னாரபபா... நான ஒரு ஆசிரியன்... என்னை மதி. பழைய பாக்கி இருக்கட்டும். புதிதாக இருநூறு ரூபா கடன கொடு என்றேன..."

"கொடுத்தானா?"

"கொடுத்தான், கன்னத்திலே அறைகிறமாதரி! போய்யா...... பழைய பாக்கியை வைத்துவிட்டு விட்டை மிதியென்று சொன்னான் ...மதிக்கவில்லே..."

"அப்புறம்! அரிசிக்கடை, சலவைக்கடை, சவரக்கடை, இப்படி ஒவ்வொரு இடத்திலேயும் சொல்லிப் பார்த்தேன்! விரட்டுறான்...மதிக்கவில்லே எவனும்..."

'பிறகு...?'

"வீட்டுக்கு வந்தேன். பெற்ற மகள்! பிள்ளை பெற்று ஊருக்குப் போகிறாள். நான் புதுப்புடவை வாங்கிக் கொடுக்கவில்லேயாம். என்னை மதிக்கவில்லே. அவள் தான்போகட்டும். அருமை மனைவியாவது மதிக்கிறாளா பார்ப்போம் என்று, அரிசி கிடைக்கவில்லே என்பதைச் சொன்னேன்...அவள் ஆடின ஆட்டத்தைப் பார்த்து விட்டு எடுத்தேன் ஓட்டம்...அவளும் என்னை மதிக்கவில்லே...'

"கேள்விப்பட்டதில்லேயா? இல்லானை, ஈன்றெடுத்த தாய் வேண்டாள், தாரமும் விரும்பமாட்டாள் என்று!!"

"பின், அப்படி நேரு சொன்னாரே! கொஞ்சமாகச்சம்பளம் வாங்குவதாலே மதிப்பு வரவில்லே என்று நினைக்காதீர்கள்... மதிப்பு என்கிறதை பணத்தை வைத்து மதிக்கிறது தப்பு என்பதாக..."

"அவருக்கே ஆரம்பத்திலே காங்கிரசிலே எப்படி மதிப்பு வந்தது தெரியுமா? பணக்கார வீட்டுப பிள்ளை என்றுதான்...இதிலா மதிபபுஇருக்கிறதென்றுகேட்டாரே ...நீ கேட்கிறதுதானே...இராசேந்திர பிரசாத்துக்கு யானையைக் கட்டித் தீனி போட்டால்தான் ஜனாதிபதி என்கிற மதிபபு இருக்கும என்று ஒரு தடவை நீங்களே சொல்லியிருக்கிறீர்களேஎன்று."

"அப்படிச் சொன்னாரா?"

"சொன்னாரா! இந்தியாவின் மதிப்பு இதிலேதான் இருக்கென்று ஆடம்பரத்துக்கு அவர் செலவு செய்கிற பணம் கணக்கா, வழக்கா!! கிருஷ்ணமேனனுக்கு 13 கார் இருந்ததாம் இலண்டன் ஹைகமிஷனராயிருந்தபோது.. ... தேவைதான், அப்பதான் நம்ம மதிப்புத் தெரியும் என்றாரப்பா நேரு. கேட்டதற்கு..."

"அப்படியா!"

"மதிப்பு அப்பதான் தெரியும் என்று ஒவ்வொரு கவர்னருக்கும் எத்தனை இலட்ச ரூபாயைக்கொட்டிக் கொடுக்கச் சொல்கிறார் தெரியுமா? அவர் சொல்லிவிட்டார் என்று நீயும் 'டெஸ்ட்' பண்ணக் கிளம்பிட்டியே! ஏங்க இப்படி மந்திரிக்கும் கவர்னருக்கும அள்ளியள்ளிக்கொடுக்கவேணுமென்று பார்லிமெண்டிலே கேட்டதற்கு, அப்பதான் மதிப்பாயிருக்குமென்று பதில் சொன்னவரப்பா அவர்..."

"பிறகு ஏன், ஏழை ஆசிரியர்களான எங்களுக்குமட்டும் பணத்திலேயா மதிப்பு இருக்கு, சமூக அந்தஸ்திலேதான் இருக்கிறதென்று சொன்னார்...?"

"அந்த அந்தஸ்தையே உருவாக்கிறது இந்தக் காலத்திலே பணம்தான் என்கிற உண்மை உனக்குத் தெரியாதா! பள்ளிக்கூடத்திலே சொல்லிக் கொடுப்பாயே. 'பணம் பத்தும்செய்யும்' 'பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே' 'ஈட்டி எட்டின வரைக்கும் பாயும், பணம் பாதாளம்வரைக்கும் பாயும்' என்றெல்லாம்........ மறந்துவிட்டாயா?"

"அப்ப, இந்த முறையே மாறாதா! பணக்காரனை மதிக்கிறதற்குப் பதில், சேவை செய்கிறவனை, நல்லவனை, உலகம் மதிக்காதா!!

"பணத்துக்கு இருக்கிற மதிப்பு ஒழிந்து, ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லே சாதியில் என்கிற நிலே ஏற்பட்டால் தான் அந்த மதிப்பு ஏற்படும... அதுவரைக்கும் நல்லவர்கள் என கிறதாலேயே உன்னை எவனும் மதிக்கமாட்டான்!!"

"நேரு சொன்னாரே..."

"அந்த நேருவே, அமெரிக்கா வைத்தானேயப்பா, அதிகமாக மதிக்கிறார்...நீ என்னமோ!!"

★